விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 03 வெள்ளிக்கிழமை (15.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 058

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இடைக்கால நிர்வாகத்துக்கான தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்

### ஐ.நாவிடம் த.தே.ம.மு. கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றினை உருவாக்குதல் தொடர்பில் தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பது நல்லதல்ல

### ஆஸி எதிர்க்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமை விடயங்களில் முழுமையாக திருப்தியடைய முடியாத போதிலும், இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து அழுத்தங்களுக்கு உட்படுத்துவது முறையில்லை என்று அவுஸ்திரேலியாவின் எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவர் ஜூலி பிஷப், ஏ.பி.சி ஊடகத்திற்கு வழங்கிய செவ்வி ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விடயங்கள், மீள்குடியேற்றம், அரசியல் தீர்வு போன்ற விடயங் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவிற்கு தேவையானவற்றை இலங்கை செய்யவில்லை - ஹெகலிய

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு முக்கியமானது என்ற விடயங்களை செய்யாத போதிலும், இலங்கை அரசாங்கத்திற்கு முக்கியமானது எனக்கருதிய விடயங்கள் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சுயாதீன நாடு என்ற ரீதியில் உச்சளவிலான அரசாங்கம் செயற்பட்டுள்ளது. குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டால் அதற்கு அஞ்சாது முகம் கொடுப்போம்.

அரசாங்கம் எந்த சந்தர்ப்பத்திலும் காணிகளையோ சொத்துக்களையோ வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யவில்லை. சில குத்தகை அடிப்படையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு (02ஆம் பக்கம் பார்க்க)

## லொறி மோதி இளைஞன் பலி

(கரவெட்டி)

மோட்டார் சைக்கிள்-லொறி மோதுண்டதில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

சித்தன்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த துரைசிங்கம் துரேந்திரன் (வயது 25) என்பவரே பலியானவராவார்.

இச் சம்பவம் நேற்றிரவு 8.30 மணியளவில் சிறுப்பிட்டி மடத்தடியில் இடம்பெற்றுள்ளது.

இவரது சடலம் நேற்றிரவு 10.20 மணியளவில் அச்சுவேலி வைத்திய சாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த நபர் கிளிநொச்சி ஹற்றன் நஷனல் வங்கியில் பணிபுரிகிறார் என தெரிவிக்கப்படுகிறது. (எ-11, 24)

## நவநீதம்பிள்ளையின் கோரிக்கை அரசாங்கத்தினால் நிராகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நவநீதம்பிள்ளை, போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் 13 பரிந்துரைகளை முன்வைத்துள்ளார். போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கோரியுள்ளார்.

நவநீதம்பிள்ளையினால் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒரு தலைப்பட்சமானது.

சனல் 4 காணொளி, வவுனியா, வெலிக்கடைச் சிறைச்சாலை சம்பவம், புலிகளின் நினைவுத் தூபி (02ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் வெள்ளம் 63 ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் பெய்துவருகின்ற கடும் மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 13 ஆயிரத்து 903 குடும்பங்களைச் சேர்ந்த 63 ஆயிரத்து 386 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களாக பெய்து வருகின்ற அடைமழையினால் பல குளங்கள் உடைப் பெடுத்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் திருக்கோயில், மண்முனை பற்று, வெல்லாவலி, காத்தான்குடி, ஏறாவூர் ஆகிய பிரதேசங்களிலும் வடக்கில் வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுமே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

வவுனியாவிலும் கிளிநொச்சியிலும் இதுவரையில் மழை வெள்ளம் காரணமாக 986 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 719 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

வவுனியாவில் கடந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## 'வன்முறைகளை ஒழித்தல்' பேரணி




(யாழ்ப்பாணம்)

பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிரான வன் முறைகளை ஒழித்தல் என்னும் தொனிப் பொருளில் நேற்று பிற்பகல் பேரணியொன்று இடம் பெற்றது.

விழுது நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம் பெற்ற இந்தப் பேரணி நல்லூர் கந்த சுவாமி கோவில் முன்றலிலிருந்து ஆரம்பமாகி சட்டநாதர் சிவன் கோவில் அருகிலுள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நிறைவடைந்தது.

உலக அன்பின் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேரணி பெண்கள் அமைப்புக்கள், (02ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ராஜித இன்று முல்லைத்தீவு விஜயம்

(முல்லைத்தீவு)

கடல், நீரியல் வளத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன இன்று காலை 9 மணியளவில் முல்லைத் தீவுக்கு விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

முல்லைத்தீவு கோம்பாவில் கிராமசேவகர் பிரிவில் உள்ள கிம்பிள்ளி இடைத்தங்கல் முகாமில் உள்ள மீனவர் குடும்பங்களையும், புதுக்குடியிருப்பு இரணைப் பாலத்தில் உள்ள மீனவக் குடும்பத்தினையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஏணைய மாவட்ட மீனவர்கள் சட்ட விரோதமாக மீன்பிடித்தல், மீனவர்களுக்கான மானியங்கள், இழுவைப் படகுகளின் பாவனை, மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் மீனவர்கள் எதிர்நோக்கும் ஏணைய பிரச்சினை தொடர்பாகவும் கலந்துரையாடப் படவுள்ளது. (எ-267)

## மீள்குடியமர்த்தக் கோரி வலி.வடக்கில் இன்று மாபெரும் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இன்று மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று இடம் பெறவுள்ளது.

இடம்பெயர்ந்து வாழும் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியேற அனுமதிக்குமாறும் இராணுவத்தினரை வெளியேற்றுமாறும் வலியுறுத்தி இந்த உண்ணாவிரதப் போராட்டம் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் முன்பாக இடம்பெறவுள்ளது.

வலி.வடக்கு மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வுக் குழு, வலி. வடக்கு இடம் பெயர்ந்தோர் மீள்குடியமர்வு பணிகளுக்கான நடவடிக்கைக் குழு என்பன இணைந்து இந்த மாபெரும் உண்ணாவிரதப்போராட்டத்தை ஏற்பாடுசெய்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## மர்மப் பொருள் வெடித்து சிறுவர்கள் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

அல்லிப்பளையில் மர்மப்பொருள் வெடித்ததில் சிறுவர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அல்லிப்பளை பளை பகுதியை சோந்த எஸ்.சத்தியநிருசன் (வயது6) எஸ்.சத்திய பிரசாந்தன் (வயது 10) என்ற சகோதரர்களே படுகாயமடைந்தவர்களாவர். இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

நேற்று மாலை படுகாயமடைந்த குறித்த சிறுவர்களின் தாயார் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த தனது வளவில் இருந்து இரும்பினால் ஆன ஓர் பொருளை எடுத்து அதில் புகை போட்டுள்ளார்.

அது திடீரென வெடித்ததில் குறித்த இரு சிறுவர் (02ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரில் இறால் மழை

காரைநகரில் நேற்று மாலை இறால் மழை பெய்துள்ளது. காரைநகர் கருங்காலி வேரக் குளம் பகுதியில் நேற்று மாலை மழை பெய்தது. மழை நீருடன் சேர்ந்து இறால்களும் வீழ்ந்து தத்தளிப்பதனை மக்கள் அவதானித்துள்ளனர். வயல்களிலும் இறால்கள் வீழ்ந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.(எ-246)






# அதிக கடன் சுமை தற்கொலையில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

கடன் சுமை காரணமாக குறித்த குடும்பஸ்தர் தற்கொலை செய்து கொண்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

மானிப்பாய் நவாலியைச் சேர்ந்த த.ஜெயராசா(வயது-34) என்பவரது சடலமே யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இவரது மரணம் தொடர்பில் யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.உதயசிறி விசாரணைகளை மேற்கொண்டார். விசாரணையின் பின் சடலம் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவருக்கு இரண்டரை வயதில் ஒரு குழந்தை உள்ளதோடு இவரது மனைவி கர்ப்பமாகவுள்ளார் எனவும்,

தற்கொலை செய்து கொண்டவருக்கு சுமார் 15 இலட்சம் ரூபாயிற்கு மேல் கடன் உள்ளதாகவும் அதன் காரணமாகவே தற்கொலை செய்து கொண்டார் எனவும் உறவினர்களால்தெரிவிக்கப்பட்டது.(எ-6)

# முதியோர் இல்லத்தில் தூக்கில் தொங்கிய வயோதிபரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி முதியோர் இல்லத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் முதியவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கந்தையா திருநாவுக்கரசு (வயது85) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலமானது நேற்று மாலை 6.30 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-6)


## காணி, வீடு விற்பனைக்கு

வீடு: தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்கு அண்மையில் 6 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

காணி: புத்தூர்-நிலாவரைச் சந்தியில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ஹோட்டல், கடைத் தொகுதி கட்டுவதற்கு பொருத்தமான காணி.

தொடர்புகளுக்கு:

ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate

காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்

26D. பிறவுண் வீதி. கொக்குவில். யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603. 0215684810


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சங்கரப்பிள்ளை



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் வன்னேரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சங்கரப்பிள்ளை 14.02.2013 வியாழக்கிழமை திருநெல்வேலியில் காலமானார். •

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செங்கமலம், நாகம்மா, சரவணமுத்து, பார்வதிப்பிள்ளை மற்றும் கார்த்திகேசு(கனடா) வைத்திலிங்கம் (கனகராயன்குளம்) ஆகியோரின் சகோதரரும் கனகேஸ்வரி, சரஸ்வதி(ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரவேலு (குணம்), பேராசிரியர் சிவலிங்கராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் தயாளினி, தயாபரன் (ஆசிரியர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), தயாரூபன்(தாதிய உத்தியோகத்தர்,யாழ் போதனா வைத்தியசாலை), Dr.சிவதி( யாழ்.போதனா வைத்தியசாலை), Dr.ரகுராமன்(கொழும்பு,தேசிய வைத்தியசாலை), இ.சௌந்தரராஜன், த.ஜெயவனஜா(ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி),த.சுரேக்கா,Dr.ம.பிரதீபன்(தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை),Dr.ர.ஜனகா(களுபோவில போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பேரனும், சாகித்தியன், ஹர்ஷன், கோசிகன், கஜானா, மேனகன்,சேயவன், ஆத்மிகா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று 15.02.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஸ்ரீ வித்தியா'
பிள்ளையார் வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-2430)

# விரிவுரைகள் நாளை நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் ஆங்கிலக் கற்கைநெறிக்கான விரிவுரைகள் நாளைசனிக்கிழமைநடைபெறமாட்டாதுஎனவும்,

17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் எனவும் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ-11)

# இரணைமடுக் குளத்தின் அவசர கதவுகள் திறப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக இரணைமடுக்குளத்தின் அவசர வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மழை வெள்ளம் ஏற்பட்டுள்ளதை அடுத்து பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

இந்தக் தகவலை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் இடம்பெயர்ந்த பல குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் நான்கு நலன்புரி முகாங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கண்டாவளை, முரசுமோட்டை, வட்டக்கச்சி, பன்னங்கண்டி ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி முகாம்களில் இடம் பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அராசங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (எ-11)

## ஐ.நாவிற்கு...

மற்றும் காணிகள் மற்றும் சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)

## மர்மப் பொரு...

களும் படுகாயமடைந்த நிலையில் பளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று இரவு 7.45 மணியளவில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதுபோன்று இரும்பிலானமேலும் 3 பொருட்கள்அவ்விடத்தில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-11)

## நவநீதம்பிள்...

கள் அழிக்கப்பட்டமை, முள்ளிவாய்க்கால் பகுதியில் ஹோட்டல் ஒன்று நிர்மாணிக்கப் பட்டமை போன்ற விடயங்கள் குறித்தும் நவநீதம்பிள்ளைகருத்து வெளியிட்டுள்ளார்.

போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒத்துழைப்புடன் விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளார்.

எனினும், இந்தக் கோரிக்கைகள் ஒருதலைப் பட்சமானது எனவும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அரசு தெரிவித்துள்ளது.(எ-11)

## 'வன்முறை...

சிறுவர் அமைப்புக்கள் என்பனவும் பங்கு கொண்டன.

பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகளை கட்டுப்படுத்த கோரியும் அது தொடர்பில் விழிப்புணர்வும் பாதுகாப்பும் அனைவருக்கும் அவசியமானது என்பதனையும் வலியுறுத்தி இந்தப் பேரணி நடத்தப்பட்டது.(எ-6)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியில் சித்திர பாட ஆசிரியராகக் கடமையாற்றிய

திரு.இ.நிமலரஞ்சன் அவர்கள்

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III (SLEAS III) இற்கு பதவி உயர்வு பெற்று திருகோணமலை கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் (ADE) கடமையாற்றும் இவர் மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.



ஆசிரியர் கழகம்,
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி

Valampurii Graphics (சி-2423)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### மீன்பிடியியல் துறை

### மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா மீள்பரீட்சை

மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா - நிலை 1D, 2D கற்கைநெறி அலகுகட்கான கற்கைநெறி இறுதித் தேர்வுகள்(End of Course Examinations) பங்குனி மாதம் ஆரம்பமாகவுள்ளன.

இவ்வலகுகட்கான கற்கைநெறி இறுதித்தேர்வில் மீள்பரீட்சார்த்தியாகத் தோற்றவுள்ள மாணவர்கள் மீன்பிடியியல் விஞ்ஞான துறையில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 28.02.2013 இற்கு முன்னர், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மீன்பிடியியல் விஞ்ஞான துறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C-2429)



- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

24 வருட அனுபவம்

2013 February- 2013 July

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology. M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

(சி/2424) விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2013


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அன்பும் ஆணவமும்

ஒரு ஊரிலே பெரிய மாமரமொன்று கம்பீரமாக செழித்து நின்றது.

அதிலே அதிகளவு பூக்கள்... கனிகள்... பறவைகள்... எனத் தினமும் காணப்படும்.

ஒரு சிறுவன் அந்த மரத்தடியிலே வந்து விளையாடுவது வழக்கம். அந்த மரத்திற்கு அந்தப் பையன் மீது ஒரு தனிப்பட்ட பாசம் பிறந்தது.

சிறுவனோ அந்த மரத்தில் இருந்த பூக்களை, பழங்களைப் பறிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். அதற்காகவே அந்த மரம் தன்னுடைய கிளைகளை வளைத்து அவனுக்கு எட்டும் அளவிற்கு தலை சாய்த்தது.

சிறுவன் பூக்களைப் பறித்தான். மரம் சந்தோசப்பட்டது.

மரம் அன்பின் அடையாளம்... அதனாலே அது கொடுப்பதிலே சந்தோசப்பட்டது. மனிதன் ஆணவத்தின் அடையாளம். அதனாலே இவன் பறிப்பதிலேயே சந்தோசப்பட்டான்.

சிறுவன் வளர்ந்து பெரியவனானான். அந்த மரத்தின் அடியிலே படுத்து உறங்கினான். பழங்களைப் பறித்துச் சாப்பிட்டான். இவையெல்லாம் அந்த மரத்திற்கு சந்தோசத்தை அளித்தது.

நாட்கள் செல்ல சிறுவன் அந்த மரத்தின் கிளையிலே உட்கார்ந்து ஊஞ்சலாட ஆரம்பித்தான்.

அவனுக்கு சந்தோசத்தைக் கொடுப்பதில் இந்த மரத்திற்கு ஆனந்தம். மரத்திற்கு அசௌகரியத்திற்கு கொடுப்பதில் அவனுக்கு ஆனந்தம். இது அன்பிற்கும் ஆணவத்திற்கும் உள்ள வித்தியாசம்.

நாட்கள் நகர அவனுக்கு கடமை, இலட்சியம் அனைத்தும் வந்து சேர்ந்தது. படித்து பரீட்சை எழுதி சித்தியடைய வேண்டியிருந்தது.

இதனால் மரத்தடிக்கு அவனது வருகை குறைந்தது.

ஆனால், மரம் இவனுக்காக காத்துக்கிடந்தது. இவன் உலக விடயங்களில் மூழ்கிப் போனான். தற்செயலாக ஒருநாள் அந்தப் பக்கமாகப் போனான்.

மரம் அவனைப் பார்த்துக் கேட்டது; "மறந்து விட்டாயா? என்னை?" நான் உன்னைப் பார்க்க வேண்டுமென்று ஆவலாகக் காத்துக்கொண்டு இருக்கிறேன்" என்றது.

இவன் பார்த்துச் சொன்னான்; "நீ என்ன வைத்திருக்கிறாய். நான் உன்னிடம் ஏன் வர வேண்டும்? உன்னிடம் பணம் இருக்கிறதா... சொல்லு வாறேன்... ஏனென்றால் நான் இப்போது பணத்தைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

"உனக்குப் பணம் தானே வேண்டும். என்னுடைய பழங்களைப் பறித்துக்கொள். அதை விற்பனை செய்து பணம் சம்பாதித்துக் கொள்" என்று மரம் கூறியது.

உடனே சற்றும் தாமதப்படாமல் மரத்திலே ஏறினான். பழங்களைப் பறித்தான். பழுக்காத காய்களையும் பறித்துக் கொண்டான். தனது கிளை கொம்புகளை உடைத்தால் கூட மரம் கவலைப்படுவதற்கு இல்லை. சந்தோசப்படும்.

இவன் பழங்கள் அனைத்தையும் பொறுக்கி விட்டு "நன்றி" எதுவுமே தெரிவிக்காமல் தனது பயணத்தை ஆரம்பித்தான்.

அதன்பின் அந்தப் பக்கமே வரவில்லை. பணம் சம்பாதிப்பதிலே குறியாக இருந்தான். மரத்திற்கு மறுபடியும் வருத்தம். "அவன் வருகை இல்லை" என்று.

பல வருடங்கள் கழிந்தன. ஒரு நாள் அவன் அந்த வழியாக வந்தான்.

உடனே "வா மகனே... என்னை வந்து கட்டிப்பிடித்துக் கொள்" என்றது மரம்.

"நான் என்ன இன்னும் சிறிய வயதிலேயே இருக்கிறேன்- உன்னை கட்டித் தழுவுவதற்கு" என்று அவன் கூறினான்.

"நான் இப்போது ஒரு வீடு கட்டப் போகிறேன். அதற்கு உன்னால் உதவ முடியுமா?" என்றான்.

"எனது கிளைகளை வெட்டிக்கொள்" என்றது. அவன் சிறிது நேரத்தினுள் அனைத்தையும் மொட்டை அடித்து விட்டான்.

மறுபடியும் சற்று நாட்கள் சென்ற பின்னர் அந்த மனிதன் வயதாகிக் கிழவனாக அவ்வழியாக வந்தான்.

"நான் தூரதேசம் சென்று பணம் சம்பாதிக்க திட்டமிட்டுள்ளேன். நான் பயணம் செய்ய ஒரு படகு தேவையாகவுள்ளது. அதற்கு நீ உதவ வேண்டும்" என்று கூறினான்.

"அது பெரிய பிரச்சினை இல்லை... என் அடிமரத்தை வெட்டிக் கொள்" என்றது மரம்.

அவன் வெட்டினான்... படகு செய்தான்... போய் விட்டான். இனிமேல் திரும்பி வருவானோ வரமாட்டானோ என்பது சந்தேகம். ஆனால், இந்த அடி மரம் அவனுக்காக காத்துக் கிடந்தது.

ஏனென்றால்... இது அன்பின் அடையாளம்... அவன் ஆணவத்தின் அடையாளம்.

அன்பு கொடுப்பதற்குத்தான் ஆசைப்படும். ஆணவம் வாங்குவதற்குத்தான் ஆசைப்படும்.

இப்படியாக ஓஷோ கதை ஒன்றைக் கூறியுள்ளார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# தம்பனைக்குளத்தைச் சேர்ந்த 173 குடும்பங்களை மடு பிரதான வீதிக்கருகில் குடியமர்த்த ஏற்பாடு

(மன்னார்)

மன்னார் மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தம்பனைக்குளம் கிராம மக்களில் ஒரு தொகுதியின்ரை மடு பிரதான வீதியில் குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மேல் தெரிவித்துள்ளார்.

மன்னார்- மதவாச்சி பிரதான வீதியில் அமைந்துள்ள தம்பனைக்குளம் கிராமம் தொடர்ச்சியாக வெள்ளப் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது.

இந்நிலையில் இக்கிராமத்தில் வெள்ளப் பாதிப்பிற்குள்ளான மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கமையவே அவர்களை மடு பிரதான வீதியில் குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தம்பனைக்குளம்கிராமத்தில்சுமார் 320 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றபோதிலும் மிகவும் தாழ்வான பகுதிகளில் வெள்ள அபாயத்தை எதிர்நோக்கும் 173 குடும்பங்களையே முதற்கட்டமாக குடியேற்றவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மடு பிரதான வீதியில் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகைக்குச் சொந்தமான 25 ஏக்கர் காணியை எமக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளார்.

மேலும் அப்பகுதியிலுள்ள அரசாங்கக் காணிகளும் பெறப்பட்டு காணிக் கச்சேரி வைக்கப்பட்டு குறித்த 173 குடும்பங்களுக்கும் காணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டு குடியேற்றம் செய்யப்படுமெனவும் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் பெய்த அடை மழையால் மல்வத்து ஓயாபெருக்கெடுத்ததனால்தம்பனைக்குளம் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியது. இதனைத் தொடர்ந்து இக்கிராமத்தைச் சேர்ந்த சுமார் 320 குடும்பங்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 11 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலையினால் எட்டு பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள எட்டு பாடசாலைகளே மூடப்பட்டுள்ளன என திருக்கோவில் வலய கல்வி பணிப்பாளர் ஆர்.சுகிர்தராஜன் தெரிவித்துள்ளார்.

வெள்ளம் ஏற்பட்டுள்ளமையினால் நேற்று புதன்கிழமை மூன்று பாடசாலைகளும் நேற்றைய தினம் எட்டு பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த எட்டு பாடசாலைகளும் எப்போது திறக்கப்படும் என இதுவரை தீர்மானிக்கப்படவில்லை எனவும் வலய கல்வி பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பொதுக்கூட்டம்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழக வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணம், 82, நாவலர் வீதியில் அமைந்துள்ள சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகத்தில் நடைபெறவுள்ளது.

புதிய நிர்வாகிகள் தெரிவு, பிறவிடயங்கள் பற்றிய கலந்துரையாடல் என்பன இடம்பெறவுள்ளதால் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 220 | 260 | 240 | 300 |
| தக்காளி | 120 | 160 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 60 | 70 |
| கரட் | 100 | 90 | 100 | 140 |
| பூசணி | 30 | 30 | 30 | 50 |
| புடோல் | 30 | 50 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 100-120 | 90-140 |
| பெரிய வெங்காயம் | 100 | 60 | 100 | 100 |
| பாகற்காய் | 70 | 100 | 70 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 50 | 70 | 70 | 90 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 40 | 40 | 60 | 70 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | -- |
| போஞ்சி | 40 | 60 | 60 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | -- | -- |
| கீரை - 1 பிடி | 15-25 | 20 | 20-30 | 40 |
| தேசிக்காய் | 30 | 60 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 30-50 | 40-50 |
| இராசவள்ளி | 80 | 110 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 120 | 100 |

# இராசி பலன்

15.02.2013
(மாசி 02, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 12.17 மணிவரை
ரேவதி காலை 7.08 மணிவரை
இராகுகாலம் 11.03-12.33 மணிவரை
சுபநேரம் 6.33-8.03 மணிவ்வரை
சஷ்டி விரதம்.

**மேடம்** கனவு பலிதமுண்டு, ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான இலாபம் கிடைக்கும், பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றை செய்து காட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், தொழிலில் உன்னதநிலை கிடைக்கும்.

**கடகம்** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுகள் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**சிங்கம்** சிக்கல்கல் விலகி சிறப்புகள் கூடும் நாள், வீட்டை சீரமைக்கும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை தென்படும், வழிபாட்டால் சிறப்படைய வேண்டிய நாள்.

**கன்னி** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்க வேண்டி வரலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் அவசியம், போசன சுகமுண்டு.

**துலாம்** சுற்றத்தார் வருகையுண்டு, திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செய்ய நேரிடலாம், தம்பதியரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** பொதுவாழ்வில் புகழ்கூடும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சொத்துக்களால் ஆதாயமுண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பிறருக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வாகன சுகமுண்டு, பெற்றோர் மீது அதிக பிரியம் காட்டுவீர்கள்.

**கும்பம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும், குடும்ப பொறுப்புக்கள் கூடும்.

**மீனம்** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுகள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலுமி சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை


கப்பற்றுறையில் கப்பற் பொறியியலாளர், கப்பல் மின் பொறியியலாளர், கப்பல் கப்டன் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிக்கான விண்ணப்ப தகைமைகளாக கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சையில் தோற்றி சித்தியெய்யாத மாணவர்களும் அல்லது க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியெய்தி க.பொ.த (உ/த) கற்க தகுதியற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

மாலுமிச்சான்றிதழ் (CDC) இச்சான்றிதழே கப்பற்றுறைக்கான நுழைவாசல். இதற்கான கற்கை நெறிகளாவன, இயந்திரவியலாளர் (Motor Man), கப்பல் தள ஊழியர்கள் (Deck Hand) ஆகியனவே இக்கற்கை நெறிகளைக் கற்பதற்கு அடிப்படைத் தகைமை க.பொ.த சா/த சித்தியெய்தியிருக்க வேண்டுமென அகில இலங்கை ரீதியில் நெறிப்படுத்தப்பட்டு வந்தபோதும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் பாதிப்புற்றோர் என்ற காரணத்திற்காக கப்பற்றுறை அமைச்சு க.பொ.த சா/தர பரீட்சைக்கு தோற்றியிருந்தாலே போதுமானது எனத் தளர்த்தியுள்ளது. இதுவும்2013ஆம்ஆண்டுவரையுமே.

கடந்த பல மாதங்களாக யாழ்ப்பாணம் மருதனார்மடம் கே.கே.எஸ்.வீதியில் இயங்கி வரும் அக்கல்வி நிறுவனம் எடுத்த முயற்சியிலும் வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கத்தின் இடைவிடாத தூண்டுதலினாலும் சர்வதேச தரத்திற்கமைவாக அந்நிறுவனங்களாலும் (D.N.V) கப்பல் அமைச்சினாலும் இக்கற்கை நெறிகளைக் கற்பிப்பதற்கான அங்கீகாரம் தற்போது கிடைத்துள்ளது.

ஆகவே சலுகைகளைப் பயன்படுத்துமாறும் மேலதிக விபரங்களுக்கு வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கத்தின் 0779786096 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அதன் தலைவர் கா.றஞ்சனதாஸ் அறிவித்துள்ளார். (அ)




நன்றி:- ஐலண்ட்

# யாழ்.இசைவிழாவில் உள்ளூர் மற்றும் சர்வதேச கலைஞர்கள் பங்கேற்பர்




(யாழ்ப்பாணம்)

சேவாலங்கா மன்றத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் யாழ்.இசைவிழா எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி யாழ்.மாநகர சபையின் வளாகத்தில் ஆரம்பமாகவுள்ளது என சேவாலங்கா மன்றத்தின் பணிப்பாளரும் யாழ்.இசைவிழாவின் பணிப்பாளருமான கௌசல்யா நடரட்ண தெரிவித்தார்.

யாழ்.கிறீன் கிராஸ் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், 2012 ஆம் ஆண்டு காலி இசை விழாவின் துணை நிகழ்வாக யாழ்.இசை விழா இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

பாரம்பரிய சமகால இசை நிகழ்வுகளை யாழ்.மாநகராட்சி மைதானத்தில் கலைஞர்கள் வழங்கவுள்ளனர்.

இந்த இசை விழா எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் இரண்டாம் திகதிகளில் யாழ்.மாநகர சபையின் வளாகத்தில் (சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்பாக) உள்ளூர் கலைஞர்களின் நிகழ்வுகளுடன் சர்வதேச கலைஞர்களின் நிகழ்வுகளும் இணைந்து இடம்பெறுகின்றன.

இசை விழாவில் கலந்து கொள்ள உள்ளவர்களுக்கு மேலும் ஆர்வமூட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காலை நேர நிகழ்வுகளில் அவற்றுக்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட மேடைகளில் பாரம்பரிய சாஸ்திரிய மற்றும் சமகால இசை நிகழ்வுகள் இடம்பெறும்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள் இரண்டு நாட்களும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் ஒதுக்கப்பட்ட பிரத்தியேக கூடாரங்களில் நடைபெறும்.

காலை நேர நிகழ்வுகளில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர் குழுக்களுக்கான இசைப் பயிற்சிப் பட்டறையாக அமைகிறது.

மாலை நேர நிகழ்வுகள் திறமை வாய்ந்த அனுபவம் மிக்க கலைஞர்களால் பிரதான மேடையில் மாலை 5 மணி தொடக்கம் இரவு 10.30 மணி வரையும் நடைபெறும்.

கலைஞர்களின் பிரதான மேடை நிகழ்வுகள் பின்வருமாறு.

**பாரம்பரிய இசை நிகழ்வுகள்**

மறை காத்த மாவீரர் (கத்தோலிக்க கூத்து பாசையூர்), பக்கீர் பைத் (அம்பாறை), பப்பர வாகன் கூத்து (சுழிபுரம்), பறைமேளக் கூத்து (முள்ளியவளை), மட்டக்களப்பு நகரின் பாரம்பரிய பாடல்கள் (மட்டக்களப்பு) , சன்னியமுக (பெந்தர, பாணந்துறை), வேளம்பு எடுத்த வீராங்கனை (முள்ளியவளை)

**சாஸ்திரிய இசை நிகழ்வுகள்**

கொழுப்பு பிறாஸ் இசைக் குழு (இலங்கையின் முதற்தர பிறாஸ் வாத்தியக்குழு), நாதரஞ்சினி (கர்நாடக சங்கீதக்குழு), கீழைத் தேச வாத்திய இசைக்குழு (Oriental Music Orchestra), பூலான்தேவி இசை நாடகம் (காயத்ரி கேமதாச இசை நாடகத் திட்டம், சங்கீத சங்கமம் (அனுபவமிக்க ஹிந்துஸ்தானி மற்றும் கர்நாடக இசைக் கலைஞர்கள் சந்திப்பு), மங்கள இசை (தவில் நாதஸ்வரம்)

**சமகால இசை நிகழ்வுகள்**

நாட்றோ(Percussion), ரன்வல ப்றிகேட் (Ranwala Brigade), ரவிபந்து வித்யாபதி மேள வாத்தியக்குழு, சப்தமி இசைகளின் தொகுப்பு (The Music matters Collective) கொழும்பு.

**சர்வதேசக் குழுக்கள்**

பங்களாதேஷ், பிரேஸில், இந்தியா, நோர்வே, பலஸ்தீன்.

இலங்கையில் பல்வேறுபட்ட பிராந்தியங்களையும் சார்ந்த வேறுபட்ட பாரம்பரியங்களை வெளிக்காண்பிப்பது மட்டுமன்றி இப்பாரம்பரியக் கலைஞர்களை குறிப்பாக பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் இளம் வயதின[ர்] மத்தியில் அறிமுகப்படுத்துவதும் யாழ்.இசை விழாவின் நோக்கமாக உள்ளது.

அத்துடன் யாழ். வரலாற்று சிறப்புக்கள் கலை மற்றும் கலாசாரத்தையும் வெளிப்படுத்தும் நிகழ்வாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நோர்வே தூதரகம் (ரோயல்) மற்றும் சர்தேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் அமைப்பு (USAID) ஆகியன யாழ்.இசை விழா நிகழ்விற்கு நிதியுதவி அளிப்பதுடன் Rikskonsertene (Concerts Norway) மற்றும் அரு ஸ்ரீ கலையகத்தின் ஆலோசனையுடன் சேவாலங்கா மன்றம் இவ்விழாவை ஒழுங்கமைக்கவுள்ளது.

இவ்விழாவானது இலங்கை இணக்கப்பட்டு பணியகம் மற்றும் யாழ்.மாநகர சபை ஆகியவற்றின் இணை அனுசரணையுடனும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு உட்செ[ல்]வதற்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது என மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் சேவாலங்கா மன்றத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் நல்லதம்பி நகுலேந்திரன், யாழ்.பல்லைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் திருமதி நவதர்ஷினி கருணாகரன், யு.எஸ்.எயிட் இணைப்பாளர் டோன் ஹெய்டன் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர். (அ-6)

## இணுவில் ஒலி நடத்தும் கட்டுரை போட்டி

இரு திங்கள் ஏடான **இணுவில் ஒலி** சஞ்சிகை பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகளை நடத்தி வருகின்றது. இதற்கமைய கீழ்ப்பிரிவில் (10 வயதுக்குட்பட்டோர்) **நான் விரும்பும் பெரியார்** என்ற தலைப்பில் 150 சொற்களுக்கு மேற்படாமலும் மத்திய பிரிவில் (11 முதல் 15 வயதுக்குட்பட்டோர்) **இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்** என்ற தலைப்பில் 300 சொற்களுக்கு மேற்படாமலும் மேற்பிரிவில் (16 முதல் 20 வயதுக்குட்பட்டோர்) **இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகளும்** என்ற தலைப்பில் நான்கு புல்ஸ்காப் தாள்களிலும் கட்டுரைகளை அமைத்து இணுவில் ஒலி, 9 2/1, நெல்ஸன் இடம், கொழும்பு - 06 என்ற முகவரிக்கு எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு ஏட்டின் ஆசிரியர் த.சிவசுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

மேலும் சிறந்த கட்டுரையாளர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என அவர் அறிவித்துள்ளார். (அ)

## உண்ணாவிரத போராட்டத்திற்கு லெனினிசக்கட்சியும் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இன்று இடம்பெறும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சி தனது ஆதரவை வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியினர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 23 வருடங்களாக தமது சொந்த வாழ்விடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட வலி.வடக்கு மக்கள் இன்றும் தமது சொந்த இடங்களில் சென்று குடியமர்வதற்கு இராணுவத்தினரால் தடுக்கப்பட்டு வருகின்றனர்.

யுத்தம் முடிந்த பின்னர் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையில் இருந்து வரும் வலி.வடக்கு மக்களுக்கு இரணுவத்தின் அறிவிப்பும் அவர்களின் செயற்பாடும் விரக்தியையும் வேதனையையுமே தந்துள்ளது.

வலி.வடக்கில் இன்னும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள வீடுகள் இடிக்கப்படுவதும் செய்தி இடம்பெயர்ந்து இன்னமும் முகாம்களில் உறவினர் வீடுகளில் வாழும் மக்களுக்கு பேரிடியாக அமைந்துள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய முன்றலில் இடம்பெயர்ந்த மக்களும் பொது அமைப்புக்களும் இணைந்து நடத்தும் உண்ணாவிரதப் போராட்டம் முற்றிலும் நியாயமானது. அம்மக்களின் போராட்டத்திற்கு எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி முழுமையான ஆதரவைத் தெரிவித்து அதில் பங்கு கொள்கின்றது.

மேலும் வலி.வடக்கில் பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை, குரும்பசிட்டி, தையிட்டி போன்ற பகுதிகளை உள்ளடக்கிய 24 கிராம சேவையாளர் அலுவலர் பிரிவு மக்கள் தமது நிலங்கள், வீடுகள், வாழ்வாதாரங்கள் அனைத்தையும் இழந்த நிலையில் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் அவர்களது நிலங்களையும் உடைமைகளையும் இராணுவத் தேவைக்கு சுவீகரிக்கப் போவதாக இராணுவத்தினர் வெளியிட்ட அறிக்கையானது அம்மக்களை மேலும் வேதனைக்குட்படுத்தியுள்ளது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5-6)




## ஒலிம்பியாட் வதிவிட பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட கணித ஒலிம்பியாட் 2 ஆவது தெரிவுப் பரீட்சைக்கான வதிவிடப் பயிற்சி கணித முகாம் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரிய மத்திய நிலையத்தில் 18,19, 20.02.2013 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

இம் முகாமிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது பெயர்,விபரங்கள் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. உரிய மாணவர்கள் மேற்படி பயிற்சி முகாமில் கலந்து கொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பளார் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் நல்லிணக்க முனைப்புக்கள் சர்வதேச மயப்படுத்தப்படுகின்றன

## ஏற்க முடியாது என்கிறார் பாலித



(கொழும்பு)

**நல்லிணக்க முனைப்புக்களை சர்வதேச மயப்படுத்துவது ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. அரசாங்கம் யுத்தத்தின் பின்னர் பாரியளவில் நல்லிணக்க முனைப்புக்களை மேற்கொண்டு வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதி பாலித கோஹன தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவை விவாதங்களில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

முழுமையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டியது அவசியமானது. குறுகிய காலத்தில் பாரியளவிலான அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு அரசாங்கம் முழு அளவில் முயற்சி மேற்கொண்டு வருகிறது. யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் அதன் பின்னரும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

2007 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2009 ஆம் ஆண்டு மே வரையில் வட மாகாணத்தில் 119 பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 5 சம்பவங்கள் தொடர்பில் ஏழு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே முதல் 2012 ஆம் ஆண்டு மே வரையில் 256 பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் தொடர்பில் 367 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதில் 6 சம்பவங்கள் தொடர்பில் பத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன்படி யுத்தம் இடம்பெற்ற காலத்தில் மொத்த குற்றச் செயல்களில் 3.3 வீதமும் அதன் பின்னர் 5.6 வீதமும் படையினருக்கு எதிராக பதிவாகியுள்ளன.

பாதுகாப்புப் படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இராணுவ சட்டத்திற்கு அமையவும் நாட்டின் சிவில் சட்டங்களுக்கு அமையவும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை சிறிய நாடு என்பதனால் சில சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்களில் பாரியளவில் பிரசாரம் செய்யப்படுகின்றது என்றார். (அ-2)


# இலவச சிங்கள, ஆங்கில மொழி வகுப்புக்கள்



வடபகுதி மாணவர்களின் மொழி ஆளுமைத்திறனை விருத்தி செய்யும் நோக்கில் இந்து பௌத்த கலாச்சாரப் பேரவையின் செயலாளர் தேசமானிய M.T.S. இராமச்சந்திரன் அவர்களின் முழுமையான அனுசரணையுடன் Europa Buildungs Forum என்ற நிறுவனத்தால் இலவச சிங்கள,ஆங்கில மொழி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணம் (29,பழம் றோட், கந்தர்மடம்), சாவகச்சேரி (A9 வீதி) ஆகிய இரு இடங்களில் நடைபெற்றுவரும் மேற்படி வகுப்புக்களில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்றுப் பயனடைந்து வருகின்றனர். வடபகுதி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த வகுப்புக்கள் விஸ்தரிக்கப்பட்டு கரவெட்டி-நெல்லியடி மத்திய கல்லூரியிலும், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் இந்த வருடத்திலிருந்து (2013) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டின் சகல இன மக்களுக்கிடையிலான தொடர்பாடலையும், ஐக்கியத்தையும் கட்டியெழுப்புவதற்காகவும், கல்வி கற்ற எமது மாணவர்கள் நாட்டின் எப்பகுதியிலாவது வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான மொழித்தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் ஆலோசனைக்கேற்ப இந்த வகுப்புக்கள் சிறந்த வகையில் கற்பிக்கப்படுகின்றன. ஆறு மாத பயிற்சிநெறி முடிவடைந்ததும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு Diploma in Sinhala Language என்ற சான்றிதழ் வழங்கப்படும். சான்றிதழ் வழங்கும் வைபவம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறுவதுடன் பிரதான அமைச்சர்கள் (கல்வியமைச்சர்,உயர்கல்வியமைச்சர்), இந்து பௌத்த கலாச்சாரப் பேரவையின் தலைவர் வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்தனதேரர் ஆகியோரால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு மாணவர்கள் கௌரவிக்கப்படுவர்.

இந்த வகுப்புக்கள் மகிந்த சிந்தனைக்கிணங்க வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்னதேரர் அவர்களின் நேரடிக்கண்காணிப்பில் நடைபெறுவதுடன் இதற்கான முழுச்செலவையும் இந்து பௌத்த கலாச்சாரப் பேரவையின் செயலாளரும், மாண்புமிகு ஜனாதிபதியின் கௌரவ ஆலோசகரும், ஐரோப்பிய நாடுகளுக்கான இராஜதந்திர ஆலோசகரும், சர்வதேச குற்றவியல் சட்டத்தரணியுமான தேசமானிய M.T.S. இராமச்சந்திரன் அவர்கள் பொறுப்பேற்று நடாத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

க.பொ.த (சா/தர),(உ/தர) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும், பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களும், பல்வேறு துறைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் உத்தியோகத்தர்களும் இந்த வகுப்புக்களில் இணைந்து பயன்பெற முடியும். வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தமக்குப் பொருத்தமான இடங்களில் பொருத்தமான நேரங்களில் சமூகமளித்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி ஒப்படைத்து வகுப்புக்களுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும். இத்தகைய சேவைக்காக எமது ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும், பணியாளர்களும் ஒவ்வொரு நிலையத்திலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

| யாழ்ப்பாணம்,சாவகச்சேரி ஆகிய நிலையங்களில் வார நாட்களிலும்,வார இறுதி நாட்களிலும் வகுப்புக்கள் நடைபெறும். | நெல்லியடி மத்திய கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகிய இடங்களில் சனி,ஞாயிறு ஆகிய தினங்களில் மட்டும் வகுப்புக்கள் நடைபெறும். |
|---|---|

- **இந்த மொழித்தேர்ச்சி வகுப்புக்கள் முற்றிலும் இலவசமாகவே நடத்தப்படும்.**

(சி- 2427) - கற்கை நெறி இணைப்பாளர்



இவர்களுக்கு **மணமகள் தேவை** — கல்யாண மாலை — இவர்களுக்கு **மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து வீரசைவம்<br>நட்சத்திரம்: பரணி 1, 4இல் செவ்<br>உயரம்: 6'5"<br>தகைமை/தொழில்: O/L (தையல்)<br>தொ.இ: B -1183 | பிறப்பு: 1992 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம், 2 இல் செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/ தொழில்: O/L<br>தொ.இ: G -1172 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>உயரம்: 5'5"<br>கி.பா:14.5, 2 இல் செவ்.<br>தகைமை/தொழில்: A/L,பிரான்ஸ் work permit<br>தொ.இ: B -1195 | பிறப்பு: 1980 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: மகம் 4<br>உயரம்: 4'3"<br>கி.பா: 27.5,12 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: A/L (முன்பள்ளி ஆசிரியர்)<br>தொ.இ: G-1174 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'5"<br>தகைமை/ தொழில்: A/L UK PR (விவாகரத்தானவர்)<br>தொ.இ: B -1196 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>உயரம்: 4'11"<br>கி.பா:46<br>தகைமை/ தொழில்: முகாமைத்துவம் (கனடா PR)<br>தொ.இ: G -1175 |
| பிறப்பு: 1983 றோ.க<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Civil Engineer (BSc)<br>தொ.இ: B -1197 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'4"<br>கி.பா: 15.5<br>தகைமை/ தொழில்: விவசாய டிப்ளோமா கணக்காளர்<br>தொ.இ: G -1176 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்ல மெய்வல்லுநர்போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம் ஆனைக்கோட்டை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையின் மாணிக்க பாக்கியம் விளையாட்டு அரங்கில் வித்தியாலய அதிபர் நா. தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கோசலை குலபாலசிங்கம், கௌரவ விருந்தினராக முன்னாள் ஆசிரியர் திருமதி லீலா சிவமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

* * * * *

(யாழ்ப்பாணம்)

யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறுகின்றது.

இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி பணிப்பாளர் செ. சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரன், கௌரவ விருந்தினராக மாகாண பொது நிர்வாக ஓய்வு நிலை உத்தியோகத்தர் ப.இராஜகோபாலன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (அ-5)

# ஏற்றத்தாழ்வற்ற கல்வி வளர்ச்சியையே நாம் வலியுறுத்தி வருகின்றோம்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

வடமாகாணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளின் பெறுபேறுகளை வைத்துக் கொண்டு மாகாணத்தின் கல்வி வளர்ச்சியினை மதிப்பிட முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பாரதிபுரம் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்,

கல்வியில் நகரங்கள், கிராமங்கள் என்ற வேறுபாடின்றி வளர்த்தெடுக்க வேண்டிய தேவையுள்ளது. இந்த வேறுபாடுகளுக்கு முன்னேற்றம் அடைகின்ற கல்வி வளர்ச்சியே கல்வித்துறையில் ஏற்படுகின்ற வளர்ச்சியாக கொள்ள முடியும். அதனை நோக்கி எமது பிரதேசங்களின் கல்வியினை கொண்டு செல்ல வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரபல பாடசாலைகளில் மாணவர்களை சேர்க்கின்ற போது பெறப்படுகின்ற அன்பளிப்பு (டொனேசன்) தொகை இலட்சங்களை தாண்டி செல்கிறது. இது ஒரு சட்ட விரோதமான செயல் என்கின்ற போதும் ஏதோ ஒரு வகையில் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றது. இதனால் ஏழை மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளில் இடம் கிடைப்பதே இல்லை. எனவேதான் ஏற்றத்தாழ்வுகள் அற்ற கல்வி வளர்ச்சியினை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் தற்போது வெளியாகியுள்ள உயர்தர பெறுபேறுகள் எமது பிரதேசத்தின் கல்வித் துறையின் முன்னேற்றம் குறித்த நம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது. யுத்த சூழலில் இருந்து நாம் மீண்டுள்ளோம். எனவே, இந்த முன்னேற்றங்கள் தொடர்ந்தும் எதிர்காலத்தில் முன்னோக்கிச் செல்ல வேண்டும் எனத் தெரிவித்த அவர் பாரதிபுரம் வித்தியாலயம் ஆயிரம் பாடசாலைகளின் திட்டங்களின் கீழ் வந்துள்ளமையினால் எதிர்காலத்தில் அனைத்து வளங்களும் கொண்ட ஒரு பாடசாலையாக மாற்றமடையும். அத்தோடு இப்பாடசாலையின் ஏனைய தேவைகளையும் கருத்தில் எடுத்து எதிர்காலத்தில் தீர்வுகள் காணப்படும். பாரதிபுரம் கிராமத்தின் அபிவிருத்தியில் நாம் விசேட கவனம் செலுத்தி வருகின்றோம் எனவும் தெரிவித்தார். (அ-2)

## இல்ல மெய்வல்லுநர்போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் சு.தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

இப்போட்டி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

* * * * *

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு கலாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறுவதாக இருந்த போதும் சீரற்ற காலநிலை காரணமாக திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (அ-5)

# ரிஸானா குடும்பம் ஏற்க மறுத்த நிதி இன்னும் திருப்பி அனுப்பப்படவில்லை

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட ரிஸானா நபீக்கின் குடும்பத்திற்கு உதவுவதற்காக சவுதி பிரஜையினால் வழங்கப்பட்ட நிதியுதவி தொடர்பில் இதுவரை எந்த தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட சவுதி அரேபியாவின் இளவரசியின் சட்ட ஆலோசகர் யஹ்யா பின் அப்துல் அஸீஸ் அல் ராசிட் 10 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கினார்.

இந்த நிதி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவிடம் காத்தான்குடியிலுள்ள அவரின் அலுவலகத்தில் வைத்து சவுதி பிரஜையினால் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் தனது மகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றிய சவுதி அரேபியாவினால் வழங்கப்படும் எந்தவித உதவிகளையும் ஏற்கமாட்டோம் என ரிஸானாவின் தாயான பரீனா நபீக் கூறியிருந்தார்.

இதனால் ஆலோசகரினால் வழங்கப்பட்ட நிதி இதுவரை ரிஸானாவின் குடும்பத்திடம் வழங்கப்படவில்லை என பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா குறிப்பிட்டுள்ளார்.

இந்த பணத் தொகையினை உரியவரிடம் திருப்பி அனுப்பவே நான் முடிவு செய்திருந்தேன். எனினும் குறித்த பணத்தை திருப்பி அனுப்ப வேண்டாம் என திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் மற்றும் ரிஸானாவின் உறவினர்கள் தன்னிடம் கேட்டுக் கொண்டனர் என அவர் குறிப்பிட்டார்.

இதனால் இந்தப் பணம் இதுவரை திருப்பி அனுப்பப்படவில்லை. இது தொடர்பான இறுதி முடிவு விரைவில் மேற்கொள்ளப்படும் என பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தொடர் மழை காரணமாக குளங்கள் உடைப்பெடுப்பு

## விவசாயிகள் நட்டஈடு வழங்குமாறு கோரிக்கை

(குருமன்காடு)



வவுனியாவில் கடந்த சில தினங்களாக பெய்த மழையின் காரணமாக இரு குளங்கள் உடைப்பெடுத்துள்ளதுடன் பல குளங்கள் வான் பாய்ந்து வருவதனால் விவசாயமும் பாதிப்படைந்துள்ளது.

வவுனியா பன்றிக்கெய்தகுளம், நாவல்குளம், பெரியமடு என்பன உடைப்பெடுத்துள்ளதாக ஓமந்தை கமநல கேந்திர நிலையத்தின் தலைவர் க.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சுமார் 100 ஏக்கருக்கும் மேற்பட்ட நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளமையினால் இம்முறை அறுவடை மேற்கொள்ள முடியாதிருப்பதன் காரணத்தால் அனைத்து விவசாயிகளுக்கும் நட்டடு வழங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமெனவும் இது தொடர்பில் வவுனியா அரசாங்க அதிபர் மற்றும் கமநல கேந்திர நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் ஆகியோரை கோரியுள்ளதாகவும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு அவர்களுடைய செலவினை ஈடுசெய்யும் முகமாக 25 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இத்துடன் வவுனியாவில் அனைத்து பிரதேசங்களிலும் தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் தோட்டச் செய்கை உட்பட மேட்டு நிலப்பயிர்ச் செய்கைகளும் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அதிகாரிகள் நட்டஈடு வழங்க வேண்டுமெனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக கமநல கேந்திர நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் திருமதி சரோஜினி தெரிவிக்கையில், உடைப்பெடுத்துள்ள குளங்களை அலுவலர்கள் நேரில் சென்று பார்வையிட்டதுடன் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பிலும் விவசாயிகளுடன் கலந்துரையாடியுள்ளார். (அ-2-266-250)

# உதவிப் பொறுப்பாளர் பதவிக்கு திறந்த போட்டி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதிக்கென உதவிப் பொறுப்பாளர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்பிக் கொள்வதற்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

இது தொடர்பான அறிவித்தல் இவ்வாண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி அரச வர்த்தமானியில் வெளிவந்துள்ளது. விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் 011 255 4975, 011 255 2641 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு இதன் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (அ-2)








யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வினையும் வெற்றியீட்டிய இல்லத்திற்கு வெற்றிக்கேடயம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி செயலகத்தினாலும் கல்வி அமைச்சினாலும் அமுல்படுத்தப்படும் சிறுவர்நேய பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி தலைமையில் இடம்பெற்றது. இதன்போது கல்வி அமைச்சின் ஆரம்ப பணிப்பாளர் திருமதி அசோகா பண்டிதசேகர, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் உட்பட வடமாகாண கல்வி உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# மாவட்ட எல்லை நிர்ணய திட்டத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டனர்

## கூட்டமைப்பு தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட எல்லை நிர்ணய நடவடிக்கைகளில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக இவ்வாறு எல்லை நிர்ணய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனினும் இந்த எல்லை நிர்ணய குழுவில் தமிழ்ப்பிரதிநிதிகள் எவரும் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குழுவில் நான்கு சிங்களவர்களும் இரண்டு முஸ்லிம்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தமிழர் ஒருவரை எல்லை நிர்ணய சபையில் நியமிக்கக்கூடிய சாத்தியம் காணப்பட்டபோதிலும் அந்த சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் பெரும் எண்ணிக்கையிலான தமிழர்கள் வாழ்ந்து வரும் நிலையில் எல்லை நிர்ணயப் பணிகளில் தமிழர்கள் உள்ளடக்கப்படாமை வருத்தமளிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. (அ-2)

# மழைகாலநிலை இருதினம் நீடிக்கும்

தற்போதைய மழைகால நிலை அடுத்து வரும் இரண்டொரு தினங்களுக்கு நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

தற்போது வடக்கு, கிழக்கு பருவ பெயர்ச்சி மழைகால நிலையே நிலவுகின்றது. அதனால் தற்போதைய மழைகால நிலை அடுத்துவரும் இரண்டொரு தினங்களுக்கு நீடிக்கும் என குறிப்பிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, ஊவா, வடமத்திய, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டத்தில் இடையிடையே மழை பெய்யும். ஏனைய பிரதேசங்களில் பிற்பகலிலோ மாலை வேளையிலோ இடி, மின்னலுடன் மழை பெய்யும்.

இதேநேரம் இடி. மின்னலுடன் மழை பெய்யும்போது கடும் காற்றும் வீசக்கூடும். அதனால் இடி, மின்னல் தாக்கத்திலிருந்தும் கடும் காற்று பாதிப்பிலிருந்தும் தவிர்த்து கொள்வதில் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# அமெரிக்க ஆதரவில் வடக்கில் இரண்டு மருத்துவமனைகள்

அமெரிக்காவின் நிதியுதவியுடன் வடக்கில் இரண்டு வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இந்த இரு வைத்தியசாலைகளும் அமைக்கப்பட்டு அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கிளிநொச்சி, முழங்காவில் ஆதார வைத்தியசாலையும் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையும் இவ்வாறு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளில் அமெரிக்காவின் இலங்கைக்கான பிரதி தூதுவர் வில்லியம் வைன்ஸ்டைன் கலந்து கொண்டார். சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் இந்த இரண்டு மருத்துவமனைகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அனல் மின் நிலையத்தை சீனாவிடம் வழங்க முடிபு

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தைச் சீன நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த அனல் மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு 1350 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

சீனாவின் சீ.எம்.சீ.ஆர்.நிறுவனம் இந்த நிர்மாணப் பணிகளை மேற்கொண்டிருந்தது. அதிகரித்துச் செல்லும் மின்சார உற்பத்திச் செலவை குறைக்கும் நோக்கில் இலங்கை மின்சார சபை இரண்டு மாற்று யோசனைகளை முன்வைத்துள்ளது.

மின்சாரக் கட்டணங்களை உயர்த்துதல் அல்லது மின் உற்பத்தி நிலையத்தை சீன நிறுவனத்திடம் ஒப்படைத்தல் ஆகிய இரண்டு பரிந்துரைகளை மின்சாரசபை முன்வைத்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் ஊடாக மொத்தமாக 900 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெறும் என வடமாகாண மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் மு. இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

மேற்படி திகதியில் பொது உளச்சார்பு பரீட்சை முற்பகல் 9 மணி முதல் 10 மணி வரையிலும் பாடத்துறை வினாப்பத்திர பரீட்சை 10.30 மணிமுதல் மதியம் 12.30 மணி வரையிலும் நடைபெறவுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமாராட்சி, தீவகம், கிளிநொச்சி ஆகிய வலயங்களுக்குட்பட்ட பரீட்சார்த்திகள் யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையிலும் வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, துணுக்காய், மன்னார், மடு ஆகிய வலயங்களுக்குட்பட்ட பரீட்சார்த்திகள் வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரியிலும் பரீட்சைக்கு தோற்றமுடியும்.

மேலும் பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளின் பாடசாலை முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பரீட்சைகள் தொடர்பான மேலதிக தகவல்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் நிர்வாக பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளரின் (021-321 5545) என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ-5)

# மலேரியா நோய் விழிப்புணர்வு

(பூந்தோட்டம்)

வவுனியாவில் சர்வோதய நிறுவனத்தின் ஊடாக மலேரியா விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் கடந்த 13 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக மலேரியா தடுப்புக்கான வழிவகைகள் அடங்கிய கற்றல் உபகரணங்கள் வவுனியா சர்வோதய மண்டபத்தில் வைத்து வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் உட்பட பாடசாலை அதிபர்களிடமும் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது மலேரியா விழிப்புணர்வு கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன் மலேரியா விழிப்புணர்வை பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (அ-266)

# இதயத்தில் நேர்மை இருந்தால் மனித வாழ்வில் அழகு மிளிரும்

## தவக்கால சிந்தனை



சீனத் தத்துவவியலாளர் கன்பியூசியஸ் சொல்கிறார்:

"இதயத்தில் நேர்மை இருந்தால் தனிமனித வாழ்வில் அழகு மிளிரும். தனிமனித அழகு மிளிர்ந்தால் குடும்பத்தில் அமைதி நிலவும். குடும்பத்தில் அமைதி நிலவினால் நாட்டில் வளமை பெருகும். நாட்டில் வளமை பெருகினால் உலகில் சமாதானம் ஊற்றெடுக்கும்"

தவக்காலத்தின் மூன்றாம் நாளாகிய இன்று தர்மம், இறைவேண்டல், நோன்பு ஆகியவற்றை மறைவாகச் செயற்படுத்திட நாம் அழைக்கப்படுகிறோம்.

இம்மூன்று அறச் செயல்களும் தனிமனித இதயங்களிலும், வாழ்விலும் அழகைச் சேர்த்து குடும்பங்களில் அமைதியை ஏற்படுத்தி சமூகத்தில் வாய்மையையும், சமாதானத்தையும் உருவாக்கக்கூடிய கருவிகளாக இயேசுவின் பார்வையில் அமைகின்றன.

தனிமனித மாற்றமானது சமூக மாற்றத்திற்கான தொடக்கமாக அமைவதால் இயேசு நம் ஒவ்வொருவரையும் இத்தவக்காலத்தில் மாற்றம் பெற அழைக்கிறார். மனம் திரும்புதல் என்பது மானுடத்தை நோக்கி நம் கண்களைத் திருப்புதலாகும்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் தள்ளப்பட்ட கொடிய நிலையில் சிக்கித் தவிக்கின்றனர். இந்நிலையில் தான் அன்பு, நீதி, பகிர்வு, சமத்துவம் போன்ற விழுமியங்கள் நிறைந்த புதிய மானிடம் படைக்க இறைவன் நம்மை அழைக்கிறார்.


இது இறைவனோடு நமது உறவை பலப்படுத்திக் கொள்ளவே. நாம் விழிப்போடு இருந்து [illegible]டி, இறைவன் உறவுப்பாலம் அமைக்கின்றார் என்பதை உணர்ந்து கொள்ள தவக்காலம் அழைக்கிறது.

தவ முயற்சிகளை ஏற்போம். தான தர்மங்களை பகட்டாக அல்ல, மறைவாக உதவி செய்து பலம் சேர்ப்போம். செபம், தவம், தர்மம் போன்ற மூன்று வழிகளில் இறை மனித உறவை வளர்த்தெடுப்போம். இம்மாற்றம் நமது ஏற்றத்தாழ்வு மிக்க சமூகத்தையும் மாற்றி இறையரசு நிலை பெற உதவும் என கத்தோலிக்கர்களாகிய நாம் நம்புவோம்.

தவக்காலம் அன்பின் காலம், அருளின் காலம், தனி மனித மற்றும் சமூக மாற்றத்தின் காலம், இறையாட்சிக் கனவை நனவாக்க உதவும் காலம், மனிதம் புனிதமடையும் காலம், மனமாற்றத்திற்கான காலம், மண்ணிலே விண்ணை விதைக்கும் காலம், நம்மை மாற்றத்திற்கு அழைக்கும் பல குரல்கள் ஒவ்வொருவரும் தூய இதயத்துடன், நேர்மையான மனத்துடன் ஒழுக்கத்தில் சிறந்து வாழ்ந்தால், செயற்பட்டால் அதுவே போதும். உலகம் வாழும்! மனிதன் வாழ்வான்! நல்லதைச் சொல்வோம். நன்மையைச் செய்வோம். நல்லவர்களாக வாழ்வோம்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அப்பிள் தான் அதிக விற்பனை

அப்பிள் நிறுவனத்தின் ஐபேட் டேப்லட் தான், உலக அளவில், விற்பனையில் முதலிடம் கொண்டுள்ளது. சென்ற டிசம்பருடன் முடிந்த காலாண்டில் 2 கோடியே 29 இலட்சம் ஐபேட் சாதனங்களை விற்பனை செய்துள்ளது அப்பிள்.

2011 ஆம் ஆண்டு இதே கால ஆண்டில் மேற்கொண்ட விற்பனையைக் காட்டிலும் 48.1% கூடுதலாக அப்பிள் .விற்பனை செய்துள்ளது. மொத்த டேப்லட் விற்பனையில், அப்பிள் டேப்லட் விற்பனை, டிசம்பருடன் முடிந்த காலாண்டில் 43.6% ஆக இருந்தது. ஆனால், இதே காலத்தில் சென்ற ஆண்டில் 46.4% ஆகவும், 2010இல் 51.7% ஆகவும் இருந்தது.

இது, அண்ட்ரொய்ட் மற்றும் விண்டோஸ் சிஸ்டம் கொண்ட டேப்லட் விற்பனை ஊடுருவலையே காட்டுகிறது. இதே காலத்தில், சாம்சங் அண்ட்ரொய்ட் மற்றும் விண்டோஸ் கொண்ட 80 லட்சம் டேப்லட்களை விற்பனை செய்து இரண்டாம் இடத்தினைப் பிடித்தது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் கூடுதலாகும். டேப்லட் விற்பனைச் சந்தையில், சாம்சங் நிறுவனத்தின் பங்கு 7.3% லிருந்து 15.1% ஆக உயர்ந்தது.

இந்த இரண்டு நிறுவனங்களை அடுத்து, அமேஸான் மற்றும் அசூஸ் நிறுவனங்கள் இடம்பிடித்துள்ளன. இந்த சந்தையில், சென்ற ஒக்டோபரில், மைக்ரோசொப்ட், தன்னுடைய சர்பேஸ் ஆர்.டி டேப்லட்டுடன் நுழைந்தது. விற்பனை செய்த டேப்லட்களின் எண்ணிக்கை 9 இலட்சத்திற்கும் குறைவாகவே இருந்தது. மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் டேப்லட் விலை சற்று அதிகமாகவே இருப்பதால், சந்தையில் அதிக அளவு விற்பனையை எட்ட முடியாது எனப் பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

# நீங்களும் கணனி வைத்தியராகலாம்...!



பாவனையில் உள்ள கணனி ஒன்று திடீரென்று ஏதேனும் பிரச்சினைகளால் செயற்பட மறுத்தால், முடங்கிப் போனால், உடனே நாம் அது எதனால் ஏற்பட்டிருக்கும் என எண்ணாமல், ஏதாவது செய்து, அதனை மீண்டும் இயக்க தான் முயற்சிப்போம். முடங்கிப் போவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், வன்பொருள் பிரச்சினைகள் சிலவும் இருக்கலாம். எனவே, இங்கு கணனியில் ஏற்படும் சில பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி சில தீர்வுகள் தரப்பட்டுள்ளன.

**1. மதர் போர்ட் திடீரென முடங்குகிறது:**
சரியான மின்சாரம் இல்லை, ரம் சரியாக வேலை செய்கிறதா என்பதைச் சோதனை செய்திடவும். சி.பி.யு. மேல் உள்ள சிறிய விசிறி சரியாகச் செயற்படவில்லை என்றாலும் இந்த பிரச்சினை ஏற்படும்.

**2. மொனிட்டரின் ஸ்கிரீன் காட்சி ஆடுகிறது:**
டிஸ்பிளே கார்ட் சரியாகப் பொருத்தப்பட்டுள்ளதைச் சோதிக்கவும். ஏதேனும் வைரஸ் புரோகிராம் உள்ளே புகுந்து இந்த வேலையைச் செய்திடலாம். அல்லது வீடியோ மெமரியில் பிரச்சினை இருக்கலாம்.

**3. திரைக் காட்சி அதிர்கிறது:**
மொனிட்டரைச் சுற்றி ஏதேனும் காந்த அல்லது ரேடியோ அலைகள் உருவாகுவதால் திரை அதிர்வு ஏற்படலாம்.

**4. சி.பி.யு. கவரில் லேசாக ஷொக் அடிக்கிறது:**
கணனிக்கான மின் இணைப்பின் ஏர்த் இணைப்பு சரியில்லாமல் இருக்கலாம். எனவே மெயின் பவர் கேபிளைச் சோதிக்கவும்.

**5. Non System Disk Error:**
சி.டி. டிரைவில் பூட் பண்ண முடியாத வேறு டிஸ்க் இருக்கலாம். அல்லது ஹார்ட் டிஸ்க்கிற்கான சீமாஸ் செட்அப்பில் தவறு இருக்கலாம். ஹார்ட் டிஸ்க்கில் பார்ட்டிஷன் உருவாக்கப்படாமல் இருக்கலாம். ஹார்ட் டிஸ்க் பார்ட்டிஷன் போர்மட் செய்யப்படாமல் இருக்கலாம்.

**6. Missing Operating System:**
சிஸ்டம் இயக்குவதற்கான பைல்கள் இல்லாமல் இருக்கலாம் - குறிப்பாக Command.com என்னும் பைல். இதனுடன் IO.sys, MS.DOS.sys ஆகிய பைல்களும் ஒரு சிஸ்டம் இயங்க இன்றியமையாதவையாகும். இவை சரியாக உள்ளனவா என்று பார்க்கவும்.

**7. Missing Command Interpretor:**
Command.com பைல் கொரப்டட் ஆகி இருக்கலாம். அல்லது வைரஸ் பாதித்திருக்கலாம். அல்லது அழிக்கப்பட்டிருக்கலாம்.

**8. IO Error:**
சீமோஸ் செற்றிங்ஸில் ஹார்ட் டிஸ்க் எந்த வகை என்று தரப்பட்டிருப்பது சரியாக இல்லை. போர்மட்டிங் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஒப்பரேட்டிங் சிஸ்டம் சரியானதல்ல.

**9. ஹார்ட் டிஸ்க்கிலிருந்து சத்தம் வருகிறது:**
சீரான மின்சாரம் தரப்படவில்லை. கேபிள்கள் சரியாகப் பொருத்தப்படவில்லை. ஹார்ட் டிஸ்க்குகளில் லூ கனக்டர் கேபிள் பொருத்தப்பட்டிருந்தால் எடுத்துவிட்டு சரியான கேபிளைப் பொருத்தவும். ஹார்ட் டிஸ்க் பலவீனமாக இருத்தல். அல்லது பெரும் அளவில் பாட் செக்டர்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்.


**11. ஹார்ட் டிஸ்க் ப்ரோசஸ் செய்கையில் முடங்குகிறது**
SCANDISK பயன்படுத்தி பாட் செக்டர்களைச் சோதனை செய்திடவும். நிறைய இருந்தால் மீண்டும் ஹார்ட் டிஸ்க்கினை போர்மட் செய்திடவும்.


**12. Hard Disk Not Detected:**
பவர் கனெக்டர் களைச் சோதனை செய்திடவும். டேற்றா கேபிள்களைச் சரி பார்க்கவும். ஜம்ப்பர்களைச் சோதனை செய்திடவும்.

**13. ஹார்ட் டிஸ்க் பார்ட்டிஷன் காட்டப்படவில்லை:**
ஹார்ட் டிஸ்க்கை போர்மட் செய்த ஒப்பரேட்டிங் சிஸ்டம், தற்போதுள்ள மதர்போர்டுடன் இணைந்து போகவில்லை.

**14. MMX/DLL FILE MISSING:**
இந்த பைல்கள் பவர் திடீரென நின்று போனதால் கொரப்டட் ஆகி இருக்கலாம். அல்லது வைரஸ் பாதித்திருக்கலாம். எனவே இந்த பைல்களை வேறு ஒரு கம்ப்யூட்டரிலிருந்து கொப்பி செய்து இதற்கு மாற்றவும்.

## விரைவில்... வருகின்றான்.... இயந்திர மனிதன்





உலகின் முதல் முழுமையான இயந்திர மனிதன் வடிவமைக்கப்பட்டுள்ளான். இந்த அதிநவீன இயந்திர மனிதனின் பெயரானது 'ரெக்ஸ்'. தானாகவே சிந்தித்து செயற்படக்கூடியதாக இது இருக்கு மென தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது இந்த இயந்திர மனிதன் பரிசோதனையில் உள்ளதால் இது பற்றிய மேலதிக விபரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை.




## கழிவறையிலும் பயன்படுத்தலாம்

iPad கணனிகளை தொடர்ச்சியாக பாவனை செய்யவேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்களுக்கென புதிய தாங்கி (Pedestal Stand) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த உபகரணமானது செல்லும் இடங்களிலெல்லாம் iPad கருவியினை பயன்படுத்தக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் [illegible] கழிவறைகளில் பயன்படுத்துவதற்கென தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் உதவியுடன் [illegible] கொண்ட iPad சாதனத்தை நிறுத்தி பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 46 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



எமிலியும் சிட்டம்மாவும் உள்வீட்டில் தரையில் விரித்த பாயில்- துண்டு சுற்றிய தலையணையில் சலவைக்குப் போய்வந்த சிட்டம்மாவின் பழஞ் சேலை ஒன்றே போர்வையாய் எமிலி; அவள் பக்கத்தில் குடும்பத்திற்கான பூர்வீகப் போர்வை போர்த்திச் சிட்டம்மா.

நாசிநரம்புகள் அதுவரை அறியாத ஒரு வாசனையும் உடம்பும் மனதும் அதுவரை அறியாத ஓர் அந்நியமும் தூக்கம் துண்டித்தன எமிலிக்கு.

எந்தக் காட்டுச்சிறுக்கியோ எஞ் சேலைய அழுக்காக்க வந்திருக்காளே... நல்லவதான் பாவம். ஆனா அவ பரட்டைத் தலையில வெளிநாட்டு ஈரும் பேனும் இருந்தாலும் இருக்கும். எதுக்கும் கொஞ்சம் எட்டியே படுத்துக்கிருவம்.

சற்றுத் தள்ளியே படுத்துக் கொண்டாள் சிட்டம்மா. அவள் தூக்கத்தை வாய்நிறைய வரவேற்றது கொட்டாவி.

சட்டென்று அறுந்தது மின்சாரம். காத்திருந்த இருள் கட்டிக்கொண்டது பூமியை.

இனி எப்போது வரும் மின்சாரம்? என்றான் இஷி.

ஜனனம்- மரணம் மாதிரிதான் எங்களூர் மின்சாரமும். எங்கள் கையில ஏதுமில்லை. வரும்; வருந்தாதே.

வருத்தமா? ஆனந்தம்... அதோ பார். பூமி இருண்டதில் வானம் பிரகாசமாகிவிட்டது. இப்போது புரிகிறது. இரவின் சௌந்தர்யம் வெளிச்சத்தால் மறைக்கப்பட்டிருக்கிறது. வானம் என் படுக்கைக்குப் பக்கத்தில் வந்து விட்டது. ரசிக்கிறேன்.

உங்கள் நாட்டில் இப்படி ஓர் இரவை நீங்கள் கடந்ததில்லையா?

இல்லை. உலகம் அடைக்கப்பட்ட ராத்திரியில் வாழப் பழகிவிட்டது. இரவு பேசுமிடத்தில் மனிதனின் காதுகள் இல்லை. பொம்மையின் மீது கொண்ட கவர்ச்சியில் பாதுகாப்பான தாய்மடிவிட்டுத் தாவிவிடும் குழந்தையைப்போல இயற்கையின் இடுப்பைவிட்டு எப்போதோ இறங்கி விட்டது மனிதகுலம்.

தாயின் இடுப்பை விட்டுக் குழந்தை என்றாவது ஒருநாள் இறங்கித்தானே ஆகவேண்டும்.

இடம் மாறுவது தப்பில்லை. இதயம் மாறுவது தப்பு. பொருள் வயப்பட்ட மனிதன் தன் குழந்தை மனதைக் கொன்றுதான் பெரியவனாகிறான். ஒவ்வொரு மனிதனும் ஒரு குழந்தையின் சமாதி.

நீங்களுமா?

இல்லை. எனக்குள் ஒரு குழந்தை கொல்லப்பட்டிருந்தால் இந்த ராத்திரியை ரசித்திருக்க மாட்டேன். நட்சத்திரங்களோடு உரையாடலும் மேகங்களில் உருவம் பார்த்தலும் நிலாவின் கதையாடலும் என்று நின்று போகிறதோ அன்றுதான் வாழ்க்கை கெட்டிப்பட்டுப்போகிறது. இந்த இரவில்தான் என் வாழ்வின் சுவர் உடைகிறது. நல்வாய்ப்புத் தந்தாய் நண்பா! நன்றி.

☆☆☆☆☆☆

மனுசன் படுப்பானா மாட்டுக் கொட்டத்துல? கொசுக்கடி தாங்கல புரண்டு புரண்டு படுக்கிறாரு கருத்தமாயி.

கருவாட்டுலயே ரத்தம் குடிக்கிற கொசு என்னிய மட்டும் விட்டுருமா?

ரெண்டு கையும் விரிச்சு வச்சு நடுவுல கொசு ஊடாறபோது டப்புன்னு அடிச்சாரு ஒரு அடி. அது வெரல் சந்துவழி வெளியேறிருச்சு வினயமா.

கொசுவும் கடனும் எம்பொழப்புல ஒழியாது போலிருக்கே... சிரமத்துலயும் சிரிச்சுக்கிட்டாரு.

இந்தக் கொசுக்கடியிலயும் மாடு மட்டும் எப்படி அசைபோட்டுக்கிட்டு அது பாட்டுக்குத் தூங்குது?

கண்டுபுடிச்சுப்புட்டாரு. விடிய விடிய வாலு செய்யுதய்ய கொசு விரட்டற வேலைய. மனுசனுக்கு வால் இல்லையேன்னு முதன் முதலாப் பெருங் கவலைப்பட்டாரு.

இந்தக் கொசுவையெல்லாம் தூங்க வச்சுட்டுக் கடைசியாத்தான் வரும் போலருக்கு என் கண்ணுக்கு என் உறக்கம்.

☆☆☆☆☆☆



ஏதோ ஒரு வாசனை எமிலியின் நாசிக்குள் இறங்கி நுரையீரலில் கசந்தது. இதமான வாசனை இல்லை; ஆனால் இனம் தெரியவில்லை.

தலையணைக்குள்ளயிருந்து வந்தது அந்த வாசனை. பொடுகுக்கு எதிராக சிட்டம்மா தேய்த்துப் படுக்கும் வேப்பெண்ணெய் மணம் என்று தெரிந்து கொள்ளாத அறியாமையால் அவள் நிம்மதி கெடாமல் இருந்தது.

வாழ்வின் பல தருணங்களில் அறியாமைதான் சந்தோஷம்; அறிவு நிம்மதிக்குச் சத்துரு.

தலையணை வாசத்தோடு கொசுவுக்கு பயந்து சிட்டம்மா தன் கைகால்களுக்கெல்லாம் தேய்த்துப் படுத்திருந்த புதிய வேப்பெண்ணெயின் நறுமணம் வேறு நாறியது.

அந்த வேப்பெண்ணெய் வாச

# பொம்மையின் மீது கொண்ட கவர்ச்சியில் பாதுகாப்பான தாய்மடி விட்டுத் தாவிவிடும் குழந்தையைப்போல .......

னையை எதிர்த்துப் போராடித் தோற்றுக் கொண்டேயிருந்தது சட்டி, பானைகளுக்கிடையே வைத்திருந்த பலாப்பழம் ஒன்றின் பழுக்கும் மணம்.

அறையில் நிலவிய நிசப்தத்தைக் கொத்திக் கொண்டேயிருந்தது முட்டையிட்டுப் பரணில் அடை ஓட்டில் படுத்திருந்த அடைக்கோழி. ஐந்து நிமிடத்துக்கொரு முறை அது தன் அலகால் முட்டையின் ஒடு உரசும் ஒலியும் தன் கால்களால் முட்டையை உருட்டி உருட்டிப் புரட்டிச் கொடுக்கும் ஓசையும் அரைமணிக்கொரு முறை அது தன் சிறகு சிலிர்த்து இடம் மாற்றிப் படுக்கும் சலசலப்பும் பாம்புப் பட்டைகளே... வந்துராதீக! முழுச்சுத்தான் கெடக்கேன் என்று விஷப் பூச்சிகளுக்கு எச்சரிக்கை செய்யும் கெக்கெக்கெ கொக்கரிப்பும் கோழி யைப் போலவே எமிலியையும் விழித்திருக்கவே வைத்தன.

வளர்ப்புக் கோழிக்குள்ள வசதிகூட வளர்பவர்களுக்கில்லையே. சொந்தச் சூழலே இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கும் ஒரு சமூகத்தில் நான் சுற்றுச்சூழல் குறித்துக் கருத்துரைப்பது எடுபடுமா? வறுமைச்சூழலில் சுற்றுச்சூழல் சற்றே சிரமமானது. துணியே இல்லாத சமூகம் எப்படித் துவைத்துக் கட்டுவது.

☆☆☆☆☆☆

சின்னப்பாண்டி... உலகத்தின் நீளமான ராத்திரி எது தெரியுமா? மேகங்களில் மேய்ந்து கொண்டிருந்த இஷி பக்கவாட்டில் தலை திருப்பிக் கேட்டான்.

கண்மூடி நெற்றி சுருக்கி யோசித்து டிசம்பரில் ஏதோ ஒருநாள் என்றான் சின்னப்பாண்டி.

வடதுருவத்தில் டிசம்பர் 21; தென் துருவத்தில் ஜூன் 21 என்று விண்ணியல் அறிக்கை சொல்கிறது. ஆனால், உண்மையாகவே நீளமான ராத்திரி எது தெரியுமா?

எது?

விழித்திருப்பவனின் விடியாத ராத்திரி.

தூங்காத இரவு துன்பமில்லையா?

இல்லை; ரசிகனுக்குத் துன்பமில்லை. இரவோடு நான் பேசுகிறேன்; என்னோடு இரவு பேசுகிறது. நிசப்தம்கூட ஏதோ ஒன்றை முணு முணுத்துவிட்டுப் போகிறது.

நிசப்தம் பேசுமா?

இருள் என்பது குறைந்த வெளிச்சம்; நிசம்பதம் என்பது குறைந்த ஒலி. காதுள்ளவன் கேட்கிறான்.

☆☆☆☆☆☆

ஆரம்பிச்சுருச்சு ராத்திரி தன் கச்சேரிய.

பத்து பத்தரை இருக்கும். புளிய மரத்துச் சிட்டுக்குருவிக சலம்பல் பண்ணுதுக. பொட்டைக் குருவிய ஆண் குருவி கொத்துதா? ஆண் குருவியப் பொட்டைக் குருவி கொத்துதா? புடிபடல. ஆனா கூத்துல ஆரம்பிச்சிக் கொஞ்சல்ல முடியுது சத்தம்.

போயிட்டு வாரேன்... போயிட்டு வாரேன்னு மரத்துக்கெல்லாம் சொல்லிட்டுச் சடசடசட்டுன்னு தென்னை மட்டை விழுகிற சத்தம் வெளியெல்லாம் விசிறியடிக்குது.

பன்னண்டு பன்னண்டரை இருக்கும்- வீட்டுக்கு வட பக்கமா தென் பக்கமான்னு தெரியல... அலறுது கூகை ஒண்ணு. அது உச்சிமரத்து ஓணானைக் கொன்னு தின்ன கொண்டாட்டச் சத்தமா? இல்ல... இன்னைக்கு ஒண்ணும் கிடைக்கல... பட்டினி கெடக்கெங்கிற அழுகையா? கண்டு பிடிக்க முடியல.

தெருவோட போற ஒரு குடிகாரன் பேச்சு அத்துவான ராத்தியில துண்டாக் கேக்குது.

மதினிய வச்சிருக்கறவன்லாம் பஞ்சாயத்துல நியாயம் பேசறான். கெட்டுப் போச்சுரா அட்டணம்பட்டி குடிகாரன் பேச்சுக்கு அர்த்தம் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டான் இஷி.

கொக்கரக்கோ...கோ...

ஒண்ணுக்கும் ஒண்ணேகாலுக்கும் மத்தியில கூவிருச்சு தலைக் கோழி.

இருமுறதும் செருமுறதும் தும்முறதும் துப்புறதுமா விடிய விடிய முழிச்சே கெடக்குதுக அங்கங்க அஞ்சாறு கெழடுகெட்டைக. காச நோயில கண்ணு முழிச்சு கெடக்கிற உசுருக தான் காவல் காக்குதுக ஊர.

மூனு மூனரை இருக்கும். தனக்குத் தெரிஞ்ச ஒரேஒரு பாட்ட தெருத் தெருவாப் பாடி முடிச்சு மூனாவது ரவுண்டு வாரான் ஒரு பைத்தியக்காரப் பய.

கஞ்சாப் போதை கண்ணுக்குள்ள
கள்ளுப் போதை காலுக்குள்ள
பொன்னாத்தா போதை மட்டும்
புத்திக்குள்ள... புத்திக்குள்ள...

மொதச் சுத்துல பாடுன அதே சுதி குறையாம மூனாம் சுத்துலயும் பாடி வர்றான் பய. பாட்டுக்கு அர்த்தம் தெரிஞ்சுக்கிட்ட இஷி சின்னப்பாண்டியத் திருப்பிக் கேக்குறான்: யாரு பொன்னாத்தா?

பைத்தியமாக்கிப்போன பழைய காதலி. இன்று அவள் மகள் வயதுக்கு வந்து ஆறேழு மாதமாகிவிட்டது.

நாலுமணிக்கு ஆரம்பமாயிருச்சு காக்காக் கச்சேரி. காக்காயெல்லாம் கூடி எழுப்பிவிட்ட பெறகு நீங்க கத்துனாலும் நான் கூவாம விடிஞ்சிருமாக்கும் பொழுதுன்னு கூவுது சேவல் அஞ்சு மணிக்கு.

அப்பறம் வாசத் தெளிக்கற வளவிச்சத்தம்; தண்ணி தெளிச்சு உருள்ற சருவச்சட்டிச் சத்தம்; காம்புல விட்டு இழுக்கிற கன்னுக்குட்டிச்சத்தம்; பால்காரன் சைக்கிள் மணிச்சத்தம்; ரெண்டு அப்பு அப்பவும் வீர்னு அழுகுற பிள்ளைகுட்டிக சத்தம்; சத்தங்களாலேயே நெம்பிப்போன ராத்திரி ஒடைஞ்சு விடிஞ்சிருச்சு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

370



# மாறியது நெஞ்சம்!

ஆறாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்த ஆனந்துக்கு விளையாட்டு மிகவும் பிடிக்கும். அது வும் கிரிக்கெட் என்றால் அவ னுக்கு உயிர்! அதேபோல் படிப்பு என்றால் வேப்பங்காய்! அதனு டைய விளைவு நாளுக்கு நாள் மோசமாகியது.

ஒரு சமயம் பரீட்சையில் அவன் வாங்கிய புள்ளிகள் கேவலமாக இருக்க அவன் அப்பா நாகேஷ் துடித்துப் போனார். ஆனந்தை வாயில் வந்தபடி அர்ச்சனை செய்த தோடு நில்லாமல் அவன் பாடசாலைக்குச் சென்று அவன் வகுப்பாசிரியர் கணபதியிடம் தன் பிள்ளையை நன்றாக அடித்து உதைத்துப் பாடம் சொல்லித்தரச் சொன்னார்.


ஆனால் கணபதியோ அந்த விடயத்தில் அடி உதவாது என்றும் ஆனந்தை நயமாகப்பேசியே திருத்திவிடலாமென்று கூறி அனுப்பினார். பின்பு வகுப்பில் இருந்த மாணவர்களை நோக்கி கவனமாகக் கேளுங்கள். இந்தத் தடவை அரையாண்டுத் தேர்வில் போதிய புள்ளி எடுக்காத மாணவர்களை முழு ஆண்டுத் தேர்வுக்கு அனுப்பப்போவதில்லை. அதனால் இப்போது முதல் ஒழுங்காகப் படியுங்கள் என்று எச்சரிக்கை விடுத்தார்.

மாணவர்கள் அனைவரும் நிஜ

## அம்புலிமாமா கதைகள்

மாகவே மறந்து போனார்கள். அன்று முதல் அரைப்பரீட்சைக்கு எல்லோரும் விழுந்து விழுந்து படிக்க ஆரம்பித்தனர். ஆனந்தும் புத்தகத்தை விரித்து வைத்துப் படிக்க முயற்சி செய்தான். ஆனால் புத் தகத்தில் டெண்டுல்கரும் தோனி யும் மாறி மாறித்தோன்றிப் படிக்க விடாமல் செய்தனர். கடைசியில் பரீட்சைக்கு முதல் நாள் தான் கிரிக்கெட் காய்ச்சல் குணமாகி படிப்பில் அக்கறை வந்தது. ஆனால் புத்தகத்தில் தலை, கால் ஒன்றுமே புரியவில்லை. அப்படியே புரிந்தாலும் மனத்தில் நிற்கவில்லை. சரி வருவது வரட்டும் என்று பரீட்சைக் குப் போனான்.

அவனுக்கு பக்கத்தில் இந்து என்ற மாணவி உட்கார்ந்து பரீட்சை எழுதினாள். கெட்ட காலத்திலும் ஒரு நல்ல காலமாக அவள் ஒரு புத்திசாலிப் பெண். அதனால் நன்றாக பரீட்சை எழுதினாள். அவள் நன்றாக எழுதியதால், ஆனந்தும் நன்றாக எழுதினான். ஒருவருடைய விடைத்தாளை அப்படியே பார்த்து வரிக்கு வரி பிசகாமல் அச்சாக எழுதுவது ஆனந்துக்கு சுலபமாக இருந்தது. அப்புறம் என்ன முதல் பரீட்சை அவன் நன்றாக எழுதினான். அதற்கு அடுத்த நாட்களிலும் அவள் அவன் பக்கத்தில் உட்கார ஆனந்த் எல்லா பரீட்சைகளும் நன்றாக எழுதினான்.



விடைத்தாளைத் திருத்திய கணபதி சேருக்கே ஒரே ஆச்சரியம் ஆனந்த் எப்படி இவ்வளவு நன்றாக எழுதினான். உடனே வகுப்பில் எல்லோர் முன்நிலையிலும் ஆனந்தைப் பாராட்டினார். முயற்சி செய்தால் எதுவும் முடியும் என்று ஆனந்த் நிரூபித்து விட்டான் என்று புகழ்ந்தார். வகுப்பில் எல்லோரும் கைதட்டினார்கள். சேர்! நான் இதுபோலவே இனி எல்லா பரீட்சைகளிலும் பார் த்து எழுதி நல்ல புள்ளி வாங்குவேன் என்று இந்துவைப் பார்த்துக் கொண்டே ஆனந்த் உறுதி கூறினான்.

தன் பிள்ளை அரைப் பரீட்சையில் நல்ல புள்ளி வாங்கியிருப்பதைக் கண்டு ஆனந்த் அம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சி. தன் அருமைப்பிள்ளைக்காக நிறைய முந்திரிப் பருப்புகள் போட்டுத் தயாரித்த நெய்யொழுகும் கேசரியை தானே வாயில் ஊட்டிவிட்டாள். என்ன! என் பிள்ளையைக் கரித்து கொட்டினீர்களே! இப்போது எப்படி புள்ளிகள் வாங்கியிருக்கிறான். பாருங்கள் என்று ஆனந்தின் அப்பாவிடம் பெருமையடித்துக் கொண்டாள். அவரும் ஆனந்துக்கு புதிய சேர்ட் வாங்கிக் கொடுத்தார்.

அடுத்து யூனிட்டெஸ்ட் ஆரம்பித்தது. ஆனந்த்படிக்கவே இல்லை. அவனுக்குத்தான் எப்படி நல்ல புள்ளிகள் வாங்குவது என்று தெரியுமே. வழக்கப்படி முதல் நாள் பரீட்சையில் இந்து பக்கத்தில் உட்கார ஆனந்த் அவள் தாளைப் பார்த்து கொப்பியடிக்க அதைப் பாழாய்ப் போன கணபதிசேர் பார்த்துத் தொலைத்துவிட்டார். உடனே இந்துவை இடம்மாற்றி உட்காரச் சொல்ல வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்தது போலாயிற்று. ஆனந்துக்கு நல்லபடியாக புத்தி சொல்ல விரும்பிய கணபதி பரீட்சை முடிந்தபின் மைதானத்திற்கு அனைவரையும் அழைத்துச்சென்றார்.

குழந்தைகளே உங்கள் எல்லோருக்கும் நான் ஒரு புத்திமதி கூறப் போகிறேன். தயவுசெய்து அதைக் கவனமாகக் கேளுங்கள். இளம் வயதிலும் சரி முதிய வயதிலும் சரி உழைப்புதான் நமக்கு மேன்மை தரும். அதுவும் உங்களைப்போன்ற பாலகர்களுக்கு உழைப்பு மிகவும் அவசியம். உழைப்பு உங்கள் நண்பன் போன் றது. அதை எப்போதும் உடன் இருத்திக் கொள்ளுங்கள். அதேபோல் சோம்பேறித்தனம் உங்கள் எதிரி. அதை அண்டவிடாதீர்கள். ஆனால் பாடுபட்டு உழைப் பதற்கு முன் ஒன்றைக் கவனத்தில் வையுங்கள். அதுதான் உங்கள் இலட்சியம்! நீங்கள் உங்கள் எதிர் காலத்தில் என்ன சாதிக்க விரும்புகிறீர்கள் என்பதை இப்போதே முடிவு செய்து கொள்ளுங்கள். அதை உங்கள் இலட்சியமாக. இலக்கா கக் கொண்டு அதை அடைவதற் குத் தகுந்த மாதிரி உழையுங்கள். அப்படிச் செய்தால் வெற்றி உங்கள் கையில்!

இதோ இங்குள்ள தோட்டத்தைப்



பாருங்கள். இந்தத் தோட்டத்தில் விதவிதமான காய்கறிச் செடிகளும் மலர்ச் செடிகளும் உள்ளன. இவையெல்லாம் உங்கள் உழைப்பில் தோன்றியவை. எவற்றையெல்லாம் பயிரிடவேண்டுமென்று திட்டமிட்டு அதன்படி உழைத்தவர்கள் நீங்கள்! உங்கள் உழைப்பின் பலனை உங்கள் கண்முன்னே காண்கின்றீர்கள்.


இதோ இந்த புடலங்காய்க ளைப் பாருங்கள். இந்தப் பிஞ்சுக் காய்களின் நுனியில் கல்லைக் கட்டி தொங்கவிடுகிறோம். அது ஏன்?

இந்தக் கேள்விக்கு மாணவர்கள் பலரும் பலவிதமான காரணங்களைக் கற்பித்தனர். அதனைக் கேட்டு சிரித்த கணபதிசேர் குழந்தைகளா! உண்மைக்காரணம் அவையல்ல. இந்தப்புடலங்காய்கள் நம் மனத்தைப்போல என்று புரிந்து கொள்ளுங்கள். கல்லைக்கட்டா விட்டால் புடலங்காய் நேராக வளராது. வளைந்து நெளிந்து கோணலாக வளரும். அவை அவ்வாறு கோணலாக வளராமல் நேராக வளரத் தான் கல்லைக்கட்டுகிறோம். அவ்வாறு கல்லைக்கட்டினால் அவை நேராக வளரும்.

நம் மனித மனமும் அதேபோல் தான்! நமக்கென்று ஒரு இலட்சியத்தை நிர்ணயித்துக்கொண்டு அதற்கேற்றபடி உழைக்காவிட்டால் நம் மனமும் சோம்பேறியாகி நம்மைக் குறுக்கு வழியில் கொண்டு செல்லும். நமக்கென்று ஓர் இலட்சியமும் அதை அடைய வேண்டும் என்ற தாகமும் நமக்குள் இருந்தால் அதுவே புடலங்காயின் நுனியில் கட்டப்படும் கல்போல் நம்மைச் சீரான பாதையில் அழைத்துச்செல்லும். உலகின் தலை சிறந்த கிரிக்கெட் வீரர் டெண்டுல்கர் அந்த இடத்தை அடைய எத்தனை பாடுபட்டிருக்க வேண்டுமென யோசித்தீர்களா? ஆகவே வாழ்வில் வெற்றி பெற விரும்பினால் அதற்கு நான் சொல்லும் வழியைக் கடைப்பிடியுங்கள்.

உங்கள் மனதில் அவ்வப்போது சபலம் ஏற்பட்டு உங்களைத் தவறான பாதைக்கு திசை திருப்பலாம்! அவ்வாறு நேராமல் பார்த்துக் கொள்ளுங்கள்! மற்றொரு மிக முக்கியமான அறிவுரை குறுக்கு வழியில் வெற்றிபெற எண்ணாதீர்கள்.

காலதாமதமானாலும் கடின உழைப்பு தேவைப்பட்டாலும் நேர் வழியிலேயே சென்று வெற்றி பெற முயலுங்கள்! போங்கள்! விளையாடுங்கள்! என்றார்.



விளையாடி முடித்ததும் வீடு திரும்ப ஆனந்த் மட்டும் கணபதி சேரை தனியாகச் சந்தித்தான். சேர் என்னை மன்னித்துவிடுங்கள்! நான் இனி குறுக்குவழியில் செல்லமாட்டேன். நீங்கள் காட்டிய நேர் வழியில் பாடுபடுவேன் என்னை நம்புங்கள் என்று கூறி அழுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

## சர்வதேச நாணய நிதியக் குழுவின் தலைவர்

(கொழும்பு)

இலங்கை கடந்த சில ஆண்டுகளாக பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைந்துள்ளதென இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சர்வதேச நாணய நிதியக் குழுவின் தலைவர் ஜோன் நெல்ம்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைமத்தியவங்கியில்நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில ஆண்டுகளாக இலங்கை பொருளாதாரத்தின் பல்வேறு வகையான துறைகளிலும் முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இதனது வளர்ச்சிப் படிமுறையானது சீரான நிலையில் காணப்படுகின்றது. இலங்கையினுடைய பண வீக்கமானது இரட்டை இலக்கங்களிலிருந்து ஒற்றையிலக்கமாக வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடப்படக் கூடிய விடயமாகும்.

இதேவேளை, இறை மற்றும் வெளிநாட்டுத் திரட்சி இடம்பெற்று வருகின்றது. துணை நில் ஒழுங்குகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. கொடுகடன் வளர்ச்சியும் உள்நாட்டு கேள்வியும் உறுதியான வேகமொன்றிற்கு சென்றுள்ளது. அத்துடன் கடந்த ஆண்டில் சென்மதி நிலுவையிலும் நல்ல அடைவு மட்டமொன்று காணப்பட்டுள்ளது.

அதேநேரம் உலகளாவிய பொருளாதாரத்தில் தொடர்ச்சியாக காணப்பட்ட நலிவடைந்த தன்மை காரணமாக வெளிநாட்டுக் கேள்வி குறைவடைந்துள்ளதுடன் 2012 இல் பெரும்பாலான காலப்பகுதியில் நிலவிய வரட்சியின் காரணமாக வேளாண்மை உற்பத்திகள் பாதிக்கப்பட்டன.

அதன் விளைவாக உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த ஆண்டில் 6 சதவீதத்திற்கு குறைவடையுமென மதிப்பிடப்பட்டிருப்பதுடன் பணவீக்கம் ஒற்றை இலக்க மட்டத்திற்கு உயர்வடைந்தது.

கடந்த ஆண்டில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவை வலுவான நிலையில் செயற்படுவதற்கு செலவினை ஈடு செய்யக் கூடிய முறையில் விலையிடலை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

ஜோன் நெல்ம்ஸ் தலைமையிலான சர்வதேச நாணய நிதியக் குழு கடந்த மாதம் 30 ஆம் திகதியிலிருந்து இன்று வரையான காலப்பகுதியில் இலங்கையில் தங்கியிருந்து அரச மற்றும் மத்திய வங்கி அலுவலர்களையும் சிவில் சமூகம், தனியார் துறை பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 15 இலங்கையர்களுக்கு மீண்டும் அகதி அந்தஸ்து

## த கார்டியன் இணையம் தகவல்

(லண்டன்)

பிரித்தானியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில் மீண்டும் பிரித்தானியாவுக்கே தப்பிச் சென்ற 15 இலங்கையர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக த கார்டியன் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

குறித்த 15 பேரும் பிரித்தானியாவில் இருந்து நாடு கடத்தப்பட்டதன் பின்னர் அவர்கள் இலங்கையில் வைத்து துன்புறுத்தப்பட்டமைக்கான ஆதாரங்களை சமர்ப்பித்ததன் பின்னரே அவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பிரித்தானியாவில் இருந்து மேலும் தமிழர்களை இலங்கைக்கும் நாடு கடத்தும் தீர்மானத்தை கைவிட வேண்டும் என்று பிரித்தானியாவில் உள்ள தமிழ் அமைப்புக்களும் மனித உரிமைகள் அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன. (அ-2)

# வாகன கணக்கெடுப்பு சிங்களத்தில் வி.படிவம்

## அமைச்சர் வாசுதேவ ஆட்சேபனை

பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சிறிய ரக வாகன கணக்கெடுப்பிற்கு சிங்கள மொழியில் மாத்திரம் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கபட்டது தொடர்பில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தமது ஆட்சேபனையை பொலிஸ்மா அதிபருக்கு தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் தேசிய மொழிக் கொள்கையினை பொலிஸ் திணைக்களம் மீறியுள்ளதாக கூறிய அமைச்சர் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் எழுத்து மூலம் கோரியுள்ளதாக தெரிவித்தார்.

கொழும்பு நகருக்கு நுழையும் சகல சிறிய ரக வாகனங்களையும் கணக்கெடுப்பு செய்யும் நடவடிக்கை கடந்த இரு தினங்களாக முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மொழிக்கொள்கையை அமுல்படுத்த பொலிஸ்மா அதிபர் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவருக்கு தெரியாமல் இந்த தவறு நடந்திருக்கலாம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)

# சூரியப்புயல் தொடர்பில் அச்சம் தேவையில்லை

## ஆர்தர் சி கிளாக் நிறுவனம் தெரிவிப்பு

சூரிப்புயல் பூமியை தாக்கப் போவதாக வெளியான செய்தி தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆர்தர் சி கிளாக் நிறுவன ஆலோசகர் சந்தன ஜெயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

சூரியப்புயல் பூமிக்கு தாக்கத்தை ஏற்படுத்தாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி அதிகாலை 2.30 இற்கு ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இதுபூமியை வந்தடைய மூன்று நாட்கள் வரை எடுக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த சூரியப்புயலால் பூமியின் தொலைத்தொடர்புகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. சூரியனில் இருந்து வெளியாகும் கதிரியக்கம் மணித்தியாலத்துக்கு பல மில்லியன் தூரம் பயணிக்கும். சில வேளைகளில் அது பூமியையும் தாக்கக்கூடும்.

எனினும் தாக்குதல் இடம்பெறுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் வரை அதனை எதிர்வுகூறமுடியாது என்றும் சந்தன ஜெயரத்ன குறிப்பிட்டுள்ளார். சூரியப்புயல் 100 முதல் 200 வருடங்களுக்கு ஒரு முறை நிகழ்கிறது.

கடைசியாக அது 1859 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. 1989 ஆம் ஆண்டு ஏற்பட்ட சிறிய புயலால் கனடாவின் மின்சாரத் தொகுதியில் பாதிப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




★ கி.மு.399-மெய்யியலாளர் சோக்கிரட்டீஸ் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டார்.

★ 590 - பாரசீகத்தின் மன்னனாக இரண்டாம் கொஸ்ராவு முடிசூடினான்.

★ 1637 - புனித ரோம் பேரரசின் மன்னனாக மூன்றாம் பேர்டினண்ட் முடிசூடினான்.

★ 1898 - ஐக்கிய அமெரிக்காவின் கடற்படைக் கப்பல் USS Maine கியூபாவில் அவானா துறைமுகத்தில் வெடித்து மூழ்கியதில் 260 பேருக்கு மேல் உயிரிழந்தனர். இந்நிகழ்வையடுத்து அமெரிக்கா ஸ்பெயின் மீது போரை அறிவித்தது.

★ 1920 - யாழ்ப்பாணத்தில் முதற்தடவையாக அரிசி பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டது.

★ 1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூர் ஜப்பானிடம் வீழ்ந்தது. கிட்டத்தட்ட 80 ஆயிரம் இந்திய, ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்திரேலியாப் படையினர் போர்க் கைதிகளாகப் பிடிபட்டனர்.

★ 1946 - ENIAC என்ற முதல் தலைமுறைக் கணனி அறிமுகமானது.

★ 1950 - சோவியத் ஒன்றியம், மக்கள் சீனக் குடியரசு ஆகியன பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

★ 1961 - பெல்ஜியத்தில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அமெரிக்க ஃபைகர் ஸ்கேற்றிங் வீரர்கள் உட்பட 73 பேர் உயிரிழந்தனர்.

★ 1970 - டொமினிக்கன் குடியரசு விமானம் ஒன்று சாண்டோ டொமிங்கோவில் கடலில் மூழ்கியதில் 102 பேர் உயிரிழந்தனர்.

★ 1989 - ஒன்பது ஆண்டு கால ஆக்கிரமிப்புக்குப் பின் ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படைகளும் வெளியேறியதாக அறிவிக்கப்பட்டது.

★ 1994 - ரஷ்யா தார்த்தஸ்தானை ஒரு உட்குடியரசாக இணைத்துக் கொண்டது. தார்த்தஸ்தானின் விடுதலைக்கான போர் ஆரம்பமானது.

★ 1996 - சீனாவின் இண்டெல்சாட் செய்மதி ஒன்று ஏவியவுடனேயே கிராமம் ஒன்றில் வீழ்ந்ததில் பலர் உயிரிழந்தனர்.

★ 1999 - குர்டிஸ்தான் தீவிரவாதத் தலைவர் அப்துல்லா ஒக்கலன் துருக்கிய இரகசியப் படைகளினால் கென்யாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

★ 2005 - யூடியூப் சேவை ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

பிறப்புகள்

★ 1564 - கலிலியோ கலிலி, இத்தாலிய வானியலாளர், இயற்பியலாளர் (இ.1642)

★ 1845 - எலிஹு ரூட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1937)

★ 1861 - ஆல்பிரட் நார்த் வொய்ட்ஹெட், பிரித்தானியக் கணிதவியலர் (இ. 1947)

★ 1861 - சார்ள்ஸ் கில்லோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர், (இ. 1938)

★ 1873 - ஹான்ஸ் இயூலர்-செல்ப்பின், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ.1964)

★ 1922 - டி.பி.விஜயதுங்கா, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி

★ 1949 - அனுரா பண்டாரநாயக்கா, இலங்கையின் அரசியல்வாதி (இ.2008)

★ 1956 - டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாளர்


இறப்புகள்

★ 1973 - அழகு சுப்பிரமணியம், ஆங்கில எழுத்தாளர், இலங்கையர் (பி. 1915)

★ 1988 - ரிச்சார்ட் பெயின்மான், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (பி.1918)

★ 1999 - ஹென்றி கென்டால், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (பி.1926)

### கலிலியோ கலிலி



கலிலியோ கலிலி 1564 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி பீசா நகரில் பிறந்தார். இவர் அறிவியல் புரட்சியோடு நெருக்கமான தொடர்புடைய ஓர் இத்தாலிய வானியலாளரும் மெய்யியலாளரும் இயற்பியலாளரும் ஆவார். இயற்பியலின் தந்தை என்ற வகையிலும் அறிவியலின் தந்தை என்ற வகையிலும் இவர் நவீன வானியலின் தந்தை எனக் குறிப்பிடப்படுகின்றார்.

இவருடைய பரிசோதனைகள் அறிவியல் சார்ந்த வழிமுறைகளை நிலைநிறுத்திய பேக்கனின் எழுத்துக்களுக்குத் துணையாக அமைந்ததாகப் பரவலாகக் கருதப்படுகின்றது.

கலிலியோ கெப்ளரின் சமகாலத்தவராவார். கலிலியோவின் வேலைகள் குறிப்பாக அரிஷ்டாட்லின் வேலைகளிலிருந்து குறிப்பிடத்தக்க திருப்பமாகும்.

கணிய அளவுப் பரிசோதனைகளையும் அவற்றின் முடிவுகளை கணித முறையில் பகுப்பாய்வு செய்வதையும் தொடக்கி வைத்தவர் என்ற வகையில் அறிவியல் புரட்சியின் அறிஞர் குழாமில் கலிலியோவுக்கு உயர்ந்த இடம் உண்டு. அக்காலத்து மேற்கத்தேய சிந்தனையில் இத்தகைய வழிமுறை மரபு கிடையாது.

இவ்வாறு வானியல் அறிவியலில் முக்கியத்துவம் பெற்ற இவர் 1642 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி உயிர்நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரும் ஓரணியில் திரண்டு போராடுவோம்
## கருணாநிதி விடுத்த அழைப்பு

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழகத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. அனைத்துலக கட்சிகளையும் ஓரணியில் கொண்டு வருவதற்கான முயற்சியை எடுத்திருக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. காங்கிரஸ் கட்சியுடன் திராவிட முன்னேற்றக் கழகம் இருப்பதால் மற்ற கட்சிகள் தி.மு.கவுடன் இணைந்து இலங்கை தமிழர்களுக்காக குரல்கொடுக்க தமிழகத்தில் தயாராக இல்லை. அதை உணர்ந்துள்ள தி.மு.க தலைமை சமீபத்தில் அதற்கான முயற்சியில் இறங்கியது. அது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய வருகையையொட்டி சென்னையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற டெசோ அமைப்பின் கருஞ்சட்டைப் போராட்டத்தில் எதிரொலித்தது.

கருஞ்சட்டைப்போராட்டத்தில் பங்கேற்றுப் பேசிய கருணாநிதி இங்குள்ள இனப் பகைவர்கள் நம்முடைய தமிழ் பெயர்களை எல்லாம் ஸ்ரீயைப் புகுத்தி வடமொழியை புகுத்தி மாற்றினார்களோ அதைப்போல ராஜபக்ஷ இலங்கையிலே தமிழ்ப்பெயர்களை அழித்துவிட்டு சிங்களப் பெயர்களை இன்றைக்கு வைத்துக் கொண்டிருக்கிறார் என்று சுட்டிக்காட்டி விட்டு இங்கே நாம் போராடுவதைப்போல இந்தியாவிலே வேறு சில பகுதிகளிலும் ராஜபக்ஷவை எதிர்த்துப் போராடுகிறார்கள். அவர்களையெல்லாம் நான் வாழ்த்துகிறேன். அவர்களுக்கு எல்லாம் என் நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் அவர்கள் டெசோ ஆர்ப்பாட்டத்தை வாழ்த்துகின்ற பெருங்குணத்தை- பெருந்தன்மையைப் பெற வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். யாரை பிரார்த்திப்பது? அவர்களைத்தான் பிரார்த்திக்க வேண்டும். அதற்காக வேறு யாரை நான்பிரார்த்திக்க முடியும். எல்லோரும் ஒன்றாக இருந்து போராடினால் வெற்றி நிச்சயம் என்று தமிழகத்தில் உள்ள மற்ற கட்சிகளுக்கு டெசோ ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக வேண்டுகோள் விடுத்தார். அத்துடன் நிற்கவில்லை கருணாநிதி. அவர் மேலும் பேசும்போது இதே கொள்கையை இலங்கையிலே- தமிழ் ஈழத்திலே பின்பற்றியிருந்தால் இன்றைக்கு நாம் ராஜபக்சவை எதிர்த்துக் கூட்டம் போட வேண்டிய அவசியம் இருந்திருக்காது என்று பட்டவர்த்தனமாக அறிவித்தார்.

இந்த பேச்சிற்கு பின்னணி இல்லாமல் இல்லை. இதற்கு முன்பு தன் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்திற்குப் பின் பத்திரிகையாளர்களிடம் பேசிய ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, காங்கிரசில் இருந்து கொண்டு ராஜபக்சவை எதிர்க்க வேண்டாம். அந்த கூட்டணியிலிருந்து தி.மு.க. விலகி இலங்கை தமிழருக்காக போராடும் என்றால் நான் அந்தக் கட்சியை விமர்சிக்க மாட்டேன் என்று வெளிப்படையாகவே அறிவித்திருந்தார். காங்கிரசை விட்டு விலகி வாருங்கள் என்ற வைகோவின் வேண்டுகோளுக்கு பதில் அளிக்கும் விதமாகத்தான் நாம் அனைவரும் ஒன்றாக இருந்து போராடுவோம் என்று அழைப்பு விடுத்தார் கருணாநிதி. இலங்கை ஜனாதிபதியின் இந்திய வருகைக்கு எதிராக தமிழகத்தில் ஆளுங்கட்சியும் காங்கிரஸ் கட்சியும் தவிர அனைத்து கட்சிகளுமே போராட்டம் நடத்தின. ஏன் காங்கிரஸ் கட்சி போராட்டம் நடத்தவில்லை. என்றாலும் அக்கட்சியின் சார்பில் தமிழகத்திலிருந்து சென்று மத்திய கப்பல்துறை அமைச்சராக இருக்கும் ஜி. கே. வாசன் ராஜபக்சவின் வருகைக்கு தடை விதிக்க வேண்டும் என்றே பேட்டியளித்தார். அதே தினத்தில் தி.மு.க. சென்னையில் போராட்டம் நடத்த வைகோ டில்லியில் உள்ள பிரதமர் மன்மோகன் சிங் இல்லத்தை முற்றுகையிடச் செல்லும் வழியில் வழிமறித்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார். அதேநேரத்தில் ம.தி.மு.க. அவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, பொருளாளர் மாசிலாமணி ஆகியோர் தலைமையில் ஏழுமலையான் தரிசனத்திற்கு வந்த இலங்கை ஜனாதிபதியை எதிர்த்து திருப்பதியில் போராட்டம் நடத்தினர். கீழ் திருப்பதிமட்டுமல்ல பொலிஸ் கண்காணிப்புகளையும் மீறி மேல் திருப்பதிக்குள்ளும் ம.தி.மு.க வினர் ஊடுருவிச் சென்றார்கள். இந்தியாவின் வேறு பகுதிகளில் போராடுவோருக்கும் நன்றி தெரிவிக்கிறேன் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி பேசியது டில்லி, திருப்பதி போன்ற பகுதிகளில் போராடிய ம.தி.மு.க வினருக்காகவே என்றால் மிகையாகாது.

வைகோவை தி.மு.க. பாராட்டியதில் வேறு ஒரு யுக்தியும் இருக்கிறது. தமிழகத்தில் இலங்கை தமிழர் பிரச்சினைக்காக தி.மு.க என்னதான் போராட்டம் நடத்தினாலும் டெசோ அமைப்பு உருவாக்கி அதன்மூலம் போராட்டம் நடத்தினாலும் இங்குள்ள கட்சிகள் அதை அங்கீகரிக்கத் தயாராக இல்லை. அதற்கு முக்கிய காரணம் காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. இருப்பதுதான். அந்த கட்சியுடன் இருக்கும் போது இலங்கை தமிழர் பிரச்சினையில் ஓரணியில் சேருவது இயலாத காரியம் என்பது ஏனைய கட்சிகளுக்குத் தெரியும். ஏனென்றால் இந்த ஓரணி என்பது வெறும் இலங்கை பிரச்சினையுடன் முடிந்து விடுவதில்லை. அடுத்து வரும் நாடாளுமன்ற தேர்தலுக்கான அணி அமைவதற்கும் உதவ வேண்டும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய அனைத்து கட்சிகளுமே காங்கிசுடன் இருக்கும் தி.மு.க. அணியில் இடம்பெற முடியாது. ஆகவேதான் இப்போது இலங்கை தமிழர் பிரச்சினைக்காக தி.மு.க. வுடன் இணைந்து போராடிவிட்டு பின்னர் தேர்தல் கூட்டணிக்காக எந்தக் கட்சியுடன் இணைவது என்ற குழப்பத்தில் இருக்கிறார்கள். இதையெல்லாம் மனதில் வைத்தே காங்கிரஸை விட்டு வெளியே வாருங்கள். அப்போது உங்களை விமர்சிக்க மாட்டேன் என்றார் வைகோ. அவருடைய அந்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் வகையில்தான் முதலில் நீங்கள் எல்லாம் என்னுடன் சேர்ந்து இலங்கை தமிழர் பிரச்சினையில் போராட வாருங்கள் என்று டெசோ ஆர்ப்பாட்டத்தின் போது அழைப்பு விடுத்துள்ளார் தி.மு.க தலைவர் கருணாநிதி. என்னுடன் நீங்கள் வந்தால் பின்னர் நான் காங்கிரசிலிருந்து வெளியே வருவதைப் பற்றி பரிசீலிக்கிறேன் என்ற தூது விடும் படலமும இதிலே மறைந்து கிடக்கின்றது.

இதை ஏற்றுக் கொள்ளவதாக இருந்தால் வருகின்ற மார்ச் 7 ஆம் திகதி டில்லியில் நடைபெறவிருக்கும் டெசோ கருத்தரங்கத்தில் அதற்கான அடுத்தகட்ட முயற்சிகள் தொடங்கலாம். மார்ச் மாதம் 27ஆம் திகதி வாக்கில் வைகோவின் நாடாளுமன்ற உரைகள் அடங்கிய ஆங்கிலப் புத்தக வெளியீடு டில்லியில் நடைபெறுவதாக ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிக்கின்றன. அதற்காக பல்வேறு அகில இந்திய தலைவர்களையும் அழைக்கிறார் வைகோ. அதுபோன்ற சூழ்நிலையில் அதற்கு முன்னர் நடைபெறுகிறது டெசோ கருத்தரங்கம். அந்த கருத்தரங்கத்தில் சேனல் 4 ஆம்னெஸ்ட் இன்டர்நேஷனல் மனித உரிமைகள் கண்காணிப்பு ஆகியவற்றின் அமைப்புகள் பங்கேற்கின்றன என்று டெசோ சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதைவிட முக்கியமாக அனைத்திந்திய தலைவர்கள் அக்கூட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. தமிழகத்தில் இலங்கை தமிழர்களுக்காக போராடும் அமைப்புகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற முயற்சியில் இங்குள்ள பழ.நெடுமாறன், வைகோ, நல்லக்கண்ணு உள்ளிட்ட தலைவர்களையும் கூட அழைக்கலாமா என்ற தீவிர ஆலோசனையில் டெசோ அமைப்பைச் சேர்ந்தவர்கள் இருப்பதாக அவர்களுக்கு நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள்.

ஒரு பக்கம் மற்ற கட்சிகளை ஓரணியில் வாருங்கள் என்று அழைத்துக்கொண்டு இன்னொரு பக்கம் ஆளுங்கட்சியாக இருக்கும் அ.தி.மு.கவை சாடுகிறது தி.மு.க. டெசோ ஆர்ப்பாட்டத்திற்குப் பின்னர் விடுத்த அறிக்கையொன்றில் இலங்கை பிரச்சினையில் இரட்டை வேடம் போடுகிறது என்று விமர்சித்துள்ளார் கருணாநிதி. அவருடைய அறிக்கையில் பிரபாகரனை கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும். தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எவரையும் இந்தியாவிற்குள் நுழைய விடக் கூடாது. போரில் அப்பாவிகள் கொல்லப்படுவது சகஜம். இலங்கையில் போரை நிறுத்துவதற்கான அதிகாரம் இந்தியாவிடம் இல்லை என்றெல்லாம் கூறியவர் அ.தி.மு.க பொதுச்செயலாளர் ஜெயலலிதா என்று கண்டனம் செய்திருக்கிறார். அதற்கு முக்கிய காரணம் இப்போது இலங்கை தமிழர் பிரச்சினையில் தி.மு.கவின் போராட்டத்தை விமர்சிக்கும் கட்சிகளான ம.தி. மு.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எல்லாமே அ.தி.மு.க. வின் இலங்கைத் தமிழர் போராட்டங்களை ஆதரிப்பதே.



சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்ட கவர்னர் உரையில் இலங்கை அரசுக்கு பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று முன்னர் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மத்திய அரசு செயற்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்து. அதை வைகோவும் வரவேற்றார். பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் ராமதாசும் வரவேற்றார். ஏன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் வரவேற்று கருத்துக்கூறியிருந்தது. தமிழகத்தில் ஆளுங்கட்சியாக இருக்கும் அ.தி. மு.கவே இலங்கை தமிழர் பிரச்சினையில் இவ்வளவு தீவிரமாக கருத்து கூறி வருவதால் அதற்காக போராடும் ஏனைய அமைப்புகள் சுதந்திரமாக செயற்பட முடிகிறது. முன்னர் 2001 முதல் 2006 வரை இந்த அ.தி.மு.க ஆட்சியில் வைகோ, பழ.நெடுமாறன் ஆகியோர் பொடாவில் சிறை பிடிக்கப்பட்டது போன்ற தொல்லைகள் இப்போதைய அ.தி.மு.க ஆட்சியில் இல்லை. இந்த சூழ்நிலையில்தான் அ.தி.மு.க பக்கம் நெருங்கி நிற்கும் இலங்கை தமிழர்களுக்காக போராடும் ஏனைய கட்சிகளை தன் பக்கம் இழுக்க ஒற்றுமையாக நின்று போராடுவோம் என்று அழைக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இதற்கு தமிழகத்தில் பலன் இருக்கிறதோ இல்லையோ டில்லி அளவில் தி.மு.க.விற்கு பலன் கிட்டியிருக்கிறது. ராகுல் காந்தி ஜனவரி மாதம் 20 ஆம் திகதி காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரானார். அதற்கு வாழ்த்து தெரிவித்தார் கருணாநிதி. அநேகமாக காங்கிரசுடன் மத்தியில் ஆட்சியிலிருக்கும் கட்சிகளில் வெளிப்படையாக வாழ்த்து தெரிவித்தது தி.மு.க. மட்டுமே. ஆனால், இந்த வாழ்த்திற்கு நன்றிக் கடிதம் கூட அனுப்பாமல் அமைதி காத்தார் ராகுல்காந்தி. ஆனால், கருணாநிதியின் அனைவரும் ஓரணியில் வாருங்கள் போராடுவோம் என்ற அறிவிப்பிற்கு பின்னர் பெப்ரவரி 9 ஆம் திகதி ராகுல் காந்தியிடம் இருந்து கருணாநிதிக்கு நன்றிக் கடிதம் வந்திருக்கிறது. குறிப்பாக டெசோ ஆர்ப்பாட்டத்தில் அப்படி பேசியதற்குப்பின்னர் இந்த கடிதம் வந்திருக்கிறது. அது மட்டுமின்றி பெப்ரவரி 10 ஆம் திகதி சென்னை வந்த பிரதமர் அலுவலக இணை அமைச்சர் நாராயணசாமி எல்.எல்.ஆர்.சி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்ற இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே ஒருமுறை தமிழர்களின் உணர்வுகளுடன் ஒன்றி ஜெனீவாவில் மனித உரிமைகள் மீறல் தொடர்பான இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்தது இந்தியா. இந்திய- இலங்கை அமைதி ஒப்பந்தம் சர்வதேச ஒப்பந்தம். அதன்மூலம் இலங்கை தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதை ஏற்றுக்கொள்ள இலங்கை இப்போது மறுக்கிறது. அதனால்தான் இந்தியா நடுநிலைமை வகிக்கிறது. ஐக்கிய நாடு சபை செய்துள்ள பரிந்துரைகளை இலங்கை அரசு செயற்படுத்தத் தவறினால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழு இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரும் எந்த தீர்மானத்தையும் இந்தியா ஆதரிக்கும் என்று அதிரடியாக கருத்து தெரிவித்துள்ளார். கூட்டணிக் கட்சியான தி.மு.க. தமிழகத்தில் உள்ள ஆளுங் கட்சி உட்பட ஏனைய கட்சிகள் எல்லாம் இலங்கை தமிழர் பிரச்சினையில் காங்கிரசை கார்னர் பண்ணுகின்றன. அதை அவர்களின் கையிலிருந்து விடுவிக்கும் வகையில் மத்திய அமைச்சர் நாராணயசாமி இப்படியொரு அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஆகவே, இந்திய நாடாளுமன்ற தேர்தல் நெருங்க நெருங்க இலங்கை தமிழர் பிரச்சினையில் தமிழகத்தில் புதிய பரிணாம வளர்ச்சி தென்படுகிறது. முக்கிய கட்சிகளான அ.தி. மு.க, தி.மு.க பக்கமாக நின்று இப்பிரச்சினையில் ஏனைய கட்சிகள் எல்லாம் போராடி வருகின்றன. அதேநேரத்தில் தமிழக அரசியல் சூழ்நிலைகளை புறந்தள்ளி வைத்துவிட்டு ஜெனீவாவில் புதிதாக வரும் அமெரிக்கத் தீர்மானத்தின் மீது இலங்கைக்கு ஆதரவாக முடிவு எடுக்க இந்தமுறை இந்தியா தயாராக இல்லை என்பதையே மத்திய அமைச்சர் நாராயணசாமியின் பேட்டி எதிரொலிக்கிறது. அந்த வகையில் இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று தமிழக கவர்னர் உரையில் வற்புறுத்திய முதல்வர் ஜெயலலிதாவிற்கும் அனைவரும் ஓரணியில் நின்று போராடுவோம் என்று அழைப்பு விடுத்த தி.மு.க தலைவர் கருணாநிதிக்கும் இது ஒரு வெற்றியே!

-எம்.காசிநாதன்-

## அடம்பன் கொடியாய் திரளுமா தமிழக அரசியல் கட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2013 - 13.03.2013



## சிம்மம்

**மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்**

**மாதத்தின் முற்பாதி வரவு, பிற்பாதி செலவு! மன உறுதியோடு செயற்பட்டு மகத்தான வெற்றியை குவிக்கும் சிம்ம இராசி நேயர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதனும் தனாதிபதியும் யோகாதிபதியும் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்கள். எனவே, பணப்புழக்கம் அதிகரிக்கும். பங்குதாரர்கள் இலாபத்தைக் கொண்டு வந்து சேர்ப்பர். இனத்தார் பகை மாறும். எதைச் செய்ய வேண்டும் என்று நினைத்தீர்களோ அதைச் செய்து முடிப்பீர்கள். மனத் துணிவுதான் உங்கள் வெற்றிக்கு மூலகாரணம்.

சொத்து விற்பனையால் வரவேண்டிய தொகை வருவதில் தாமதம் ஏற்படுகிறதே என்று நினைத்தவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும். சொந்த பந்தங்களின் அரவணைப்போடு வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வீர்கள். புத ஆதித்ய யே இருப்பதால் கல்விக்காக எடுத்த கைகூடும். கல்யாண கனவுக ாவாக்கும் விதத்தில் வக்ர நிவர்த்தியான குருவின் பார்வையும் குடும்ப ஸ்தானத்தில் பதிவாகிறது.

குடும்பத்தில் உள்ள குழப்பங்கள் அகலும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் மாறும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை முடிவடையாத காரியங்கள் இப்பொழுது முடிவடையும். சுக்ர பலத்தால் ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. மாதக் கடைசியில் விழிப்புணர்ச்சியோடு செயற்படவேண்டிய சூழ்நிலை உருவாகும்.

முற்பாதியில் வந்த வரவு அனைத்தும்

### பணப்புழக்கம் அதிகரிக்கும் இனத்தா க மாறும் பங்குதாரர் இலாபத்தைக் கொண் வந்து சேர்ப்பர்

பிற்பாதியில் எதிர்பாராத விதத்தில் செலவாகலாம். காரணம் சனி, செவ்வாயின் பார்வை ஏற்படுவதால்தான். பொதுவாக பகைக் கிரகங்களின் பார்வை எந்த இடத்தில் பதிகிறதோ அந்த இடத்திற்குரிய ஆதிபத்தியங்கள் நடைபெறுவதில் தாமதம் ஏற்படும். பகைக் கிரகங்கள் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டால் பிரச்சினைகள் அதிகரிக்கும். அதுபோன்ற காலங்களில்தான் முறையான பரிகாரங்களை செய்ய வேண்டு பலம் தரும் பரிகாரங்களை நம்பி யோடு நாம் செய்தால் வளம் ழக்கை உருவாகும். நிரந்தர ம நிம்மதியும் கிடைக்கும். அந்த படையில் அங்காரக வழிபாடும் அனுமன் வழிபாடும் உங்கள் தங்குதடைகளை அகற்றி தக்க விதத்தில் பலன்களை வழங்கும்.

**கும்பச் சுக்கிரனின் சஞ்சாரம்!**

உங்கள் இராசிக்கு 3,10 இற்கு அதிபதியான சுக்கிரன் 7 ஆம் இடத்தில் தனாதிபதி புதனுடன் இணைந்து சஞ்சரிக்கப்போகிறார். இந்த புத சுக்கிர யோகத்தின் விளைவால் தன வரவு தாராளமாக வந்து சேரும். மனைவி, மக்கள் வழியிலும் உதிரி வருமானம் கிடைத்து மகிழ்வளிக்கும். நீண்ட நாட்களாக விற்பனை ஆகாத இடங்களும் கூட விற்பனையாகும். அதன்மூலம் தன லாபங்கள் கிடைக்கும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

மார்ச் 2 ஆம் திகதி மீன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் ஏதேனும் ஒரு பாதிப்புகள் உருவாகலாம். வீடு மாற்ற சிந்தனைகள் மேலோங்கும். வருமானம் திருப்திகரமாகவே இருக்கும்.

**செவ்வாய், சனி பார்க்கும் காலம்!**

மார்ச் 2 ஆம் திகதி முதல் மீனத்தில் உள்ள செவ்வாய் சனியைப் பார்க்கிறார். எனவே, கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டிய நேரமிது. 6,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனியை செவ்வாய் பார்ப்பதால் எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். இடமாற்ற சிந்தனைகள் மேலோங்கும். உதிரி வருமானங்கள் வந்தாலும் உள்ளத்தில் அமைதி இருக்காது. வழக்குகளில் திடீர் திருப்பம் ஏற்படலாம். அரசியல் வாதிகளுக்கு பொறுப்புகள் மாறும்.

இம்மாதம் குரு தட்சணாமூர்த்தி வழிபாடு குதூகலத்தை வரவழைத்துக் கொடுக்கும்.

இம்மாதத் தொடக்கத்தில் நல்ல வாய்ப்புகள் இல்ல டி வந்துகொண்டே இருக்கும். தெய் தியும் தன்னம்பிக்கையும் கூடுதல ந்தால்தான் மாதக் கடைசியில் ம ப வரவழைத்துக் கொள்ள இயலும். உற்றார், உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன்- மனைவிக்குள் கருத்துவேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. முற்கோபத்தை குறைத்துக் கொண்டால் முன்னேற்ற பாதிப்புகள் ஏற்படாது. ஆனைமுகப்பெருமான் வழிபாடும் சனீஸ்வரர் வழிபாடும் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக்கொடுக்கும்.

# சிவல்புரி சிங்காரம்



## கன்னி

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**வாக்குக்கொடுக்கு முன் யோசிப்பது நல்லது! உழைப்புக்கு அஞ்சாத உள்ளத்தைப் பெற்ற கன்னி இராசி நேயர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது வாக்கு ஸ்தானத்தில் சனியும் இராகுவும் இணைந்து இருக்கிறார்கள். 6 ஆம் இடத்தில் சூரியன், செவ்வாய், புதன் சேர்க்கை பெற்று இருக்கிறது. 8 ஆம் இடத்தில் கேது சஞ்சரிக்கிறார். எனவே, எண்ணங்கள் எளிதில் நிறைவேற இறை வழிபாடு அதிகம் உங்களுக்கு தேவை. வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டும் விதத்தில் குருவின் பார்வை உங்களுக்கு அமைந்தாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலுமா என்பது சந்தேகம்தான். பொதுவாக 6 ஆம் இடத்திலும் 8 ஆம் இடத்திலும் வலிமையான கிரகங்கள் சஞ்சரிக்கும் பொழுது எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வதே நல்லது.

சிலருக்கு வாக்கு கொடுத்துவிட்டு அதைக்

### எண்ணங்கள் எளிதில் நிறைவேற இறைவழிபாடு தேவை எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசிக்க வேண்டும்

காப்பாற்ற இயலாமல் போகலாம். எனவே, யாருக்கும் வாக்கு கொடுக்கு முன் ஒருகணம் யோசித்து செய்வதுதான் நல்லது. குடும்ப சுமை கூடும். கொடுக்கல்- வாங்கல்களில் மந்த நிலை ஏற்படலாம். சர்ப்ப தோஷத்தின் பிடியில் உங்கள் ஜாதகம் இருக்கிறது. எனவே, ஏற்றமும் இறக்கமும் உங்களுக்கு அடிக்கடி வந்துகொண்டே இருக்கலாம்.

பணவரவு திருப்திகரமாக இருந்தாலும் மனநிம்மதி இல்லையே என்று சொல்வீர்கள். இதுபோன்ற காலங்களில் முறையான சர்ப்ப சாந்திகளை செய்து கொள்வது நல்லது. சுய ஜாதகத்தில் இராகுதிசை, கேதுதிசை நடப்பவர்கள் இராகுபுத்தி, கேதுபுத்தி நடப்பவர்கள் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது.

வீடு, வாகனங்கள் மற்றும் வீட்டிற்கு தேவையான விலையுயர்ந்த பொருட்கள் வாங்குவதில் பணத்தை விரயம் செய்வது நல்லது. அப்படி செய்தாலும் கூட ஒரு சில காரியங்களில் ஏமாற்றங்களையும் எதிர்பார்ப்புகளையும் சந்திக்க நேரிடலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது. தொழில் செய்பவர்கள் கூட்டாளிகளை முழுமையாக நம்பி செயற்பட முடியுமா? என்பது சந்தேகம் தான். கொடுத்த பணியை பாதியிலேயே விட்டுவிட்டு அவர்கள் தன் சொந்த பணியை செய்யத் தொடங்குவர். எனவே, யாரிடமும் பொறுப்பு கொடுத்தால் கொடுப்பதற்கு முன் யோசிப்பது நல்லது.

**கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 22 ஆம் திகதி கும்ப இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப்போகிறார். 2,9 இற்கு அதிபதி 6 இல் சஞ்சரிக்கும் பொழுது கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சியில் இருந்த தளர்ச்சி நீங்கும். கொடுத்த கடன்கள் வசூலாகலாம். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து ஆனந்தப்படுவீர்கள். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். உத்தியோக உயர்வும் ஊதிய உயர்வும் எதிர் பார்த்தபடி வந்து சேரும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

மார்ச் 2 ஆம் திகதி மீன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாவதில் கொஞ்சம் தாமதம் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்திலும் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. அலைச்சல் அதிகரிக்கும். அந்நியதேச தொடர்பு ஏற்படுவதில் தாமதம் உருவாகலாம். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்து செல்வது நல்லது.

**செவ்வாய், சனி பார்க்கும் காலம்!**

பொதுவாகவே பகைக் கிரகங்களின் பார்வை 2 ஆம் இடத்தில் பதியும் பொழுது நினைத்ததை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை உருவாகலாம். அனைத்து காரியங்களிலும் தாமதம் ஆட்கொள்ளும். பலன் தரும் பரிகாரங்களை நீங்கள் செய்ய நினைத்தாலும் கூட செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படும். இதுபோன்ற காலங்களில் அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வதன் மூலமே ஆதாயம் பெற முடியும்.

இம்மாதம் ஆனைமுகப்பெருமான், ஆஞ்சநேய பிரபு, வராகி ஆகியவற்றை வழிபாடு செய்வது நல்லது.

இம்மாதம் பணத்தேவைகள் பூர்த்தியாவதில் கொஞ்சம் தாமதம் ஏற்படலாம். பக்குவமாகப்பேசி காரியங்களை சாதித்துக் கொள்வது நல்லது. தக்க தருணத்தில் உறவினர்களை கைகொடுத்து உதவ வேண்டுமானால் தணிந்து செல்ல வேண்டும். பணிந்து செல்ல வேண்டும். மண வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்பட ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயற்படுவது நல்லது. மாதத்தின் மையப் பகுதியில் உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவதாகச் சொல்லி விலகலாம். பிறரை பற்றி விமர்சிப்பதை தவிர்ப்பதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும். சர்ப்ப தோஷ பரிகாரங்களை செய்வது சந்தோஷத்தைக் கொடுக்கும்

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பூகோள வெப்பமாதல் Global Warming

**காபனீர்ரொட்சைட்டு ($CO_2$) வாயு வெளியேற்றப்படும் செயற்பாடுகள்**

வாகனங்களின் புகை, தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் புகை, காடழிப்பு, சக்தி வலு நிலையம், இயற்கை இருப்புகள் அகழ்வு, குப்பைகளை எரியூட்டல், கட்டட வேலைகள் போன்ற பல காரணிகளினால் $CO_2$ வாயு வளிமண்டலத்தில் பரவுகின்றது.



**மீதேன் ($CH_4$) வாயு வெளியேற்றப்படும் செயற்பாடுகள்**

வளிமண்டலத்தில் இருந்து $CO_2$ வாயு வெப்பத்தை உறிஞ்சும் அளவை விட $CH_4$ வாயு கிட்டத்தட்ட 20 மடங்கு வெப்பத்தை உறிஞ்சும். கடந்த 10 ஆண்டுகளில் $CH_4$ வாயு வளிமண்டத்தில் பரவும் செயற்பாடுகள் அதிகரித்து காணப்படுகின்றது. நெல் வயல்கள், சேற்று நிலங்கள் போன்றவற்றிலுள்ள பக்ரீறியாக்களின் தொழிற்பாடுகள் மற்றும் சுவட்டு எரிபொருட்கள் போன்றவற்றில் இருந்து $CH_4$ வாயு வெளியேற்றப்படுகின்றது.

**(இரு நைதரசன் ஒட்சைட்டு) $N_2O$ வாயு வெளியேற்றப்படும் செயற்பாடுகள்**

இவ்வாயுவானது பொதுவாக நைலோன் உற்பத்தி, $HNO_3$ அமிலம் தயாரிப்பு, பசளைகளின் உபயோகம், ஊக்கி மாற்றிகள் பொருத்தப்பட்ட வாகனங்கள், சேதனப் பொருட்களின் எரியூட்டல் போன்ற செயற்பாடுகளினால் $N_2O$ வாயு வெளியேற்றப்படுகிறது.

இவ்வாயு நிறமற்றது. தீப்பற்றும் தன்மையற்றது. அத்துடன் இவ்வாயு சிரிப்பூட்டும் வாயு என அழைக்கப்படும்.


**குளோரோபுளோரோ காபன் (CFC) வெளியேற்றப்படும்.**

செயற்பாடுகள் குளிரூட்டி, குளிர் நிலையை உருவாக்கும் சாதனம் (air conditioner), நுரையாக்கி (Foom pocking), காவிலிகள் (insulators), கரைப்பான்கள் போன்றவற்றின் மூலம் CFC வளி மண்டலத்தில் பரவுகின்றது.

இன்றைய வளரும் விஞ்ஞான உலகில் இவ்வாயுக்களின் தோன்றல் வீதம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது எனக் கூற வேண்டும். பிற்காலங்களில் இதன் தாக்கம் மிகப் பாரிய விளைவை ஏற்படுத்தக்கூடும்.

இவ்வாயுக்களின் பரவுகையினால் பூகோளம் வெப்பமடைந்து வருகின்றது என முன்னர் பார்த்தோம். இனி இதன் தாக்கம் எவ்வாறு அமைகின்றது என அறிய ஆவலாக இருப்பீர்கள். தொடர்ந்து வாசியுங்கள்.

வெப்ப அலைவுகள் ஏற்படும் இடங்களில் கடும் வரட்சி நிலவும். இதனால் தரை நிலங்கள் பயிற்ச் செய்கைக்கு உகந்ததற்றதாகி விடும். தாவரங்களின் வளர்ச்சி பாதிப்படையும். நீர் நிலைகள் வற்றி விடும். பனிப்பாறைகள் உருகும். இதனால் கடல் மட்டம் உயரும். கடல் வாழ் உயிரினங்களின் வாழ்க்கை வட்டம்



சீர்குலைந்து விடும். இப்படிப்பட்ட தாக்கங்களினால் உணவு உற்பத்திகளுக்கும் தாக்கம் ஏற்படும். இவ்வாறான காரணங்களினால் இயற்கை சமனிலை மாற்றம் அடையும்.

பூகோள வெப்பமாதலை எவ்வாறு இயன்றவரை கட்டுப்படுத்தலாம் என பார்ப்போம். பூகோள வெப்பமாதலை முற்றாக கட்டுப்படுத்தி விட இயலாத விடயம் என்றாலும் மனிதர்களாகிய எமது பொறுப்பான செயற்பாடுகள் மூலம் இயன்றவரை குறைக்கலாம் என்பதே பொதுவான கருத்தாகும்.

நாம் பயன்படுத்தும் மின்சார அளவைக் குறைத்தல், நிலக்கரிக்கு பதிலாக மாற்று வளங்களைப் பயன்படுத்தி மின்சாரத்தை பெற்றுக் கொள்ளலாம். எரிபொருள் பாவனைகளை குறைத்தல், வாகனங்களின் பாவனைகளை குறைத்தல், பொருத்தமான ஊக்கிகளை பயன்படுத்தி வாகனங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருட்களின் பூரண தகனத்தை ஏற்படுத்தல், கிருமி கொல்லிகள், பசளைகள் என்பவற்றின் பாவனைகளை கட்டுப்படுத்தல், தொழிற்சாலைகளை நிறுவும் போது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அகற்றப்படும் கழிவுப் பொருட்களை பயனுள்ள முறையில் மீளப் பயன்படுத்தக் கூடிய முறைகளை இனங்கண்டு செயற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இச்செயற்பாடுகளின் போது மேல் கூறப்பட்ட வாயுக்களின் தோன்றல் வீதம் மிக இழிவாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

எனவே, உலகில் உள்ள அனைத்து மக்களும் ஒன்றிணைந்து எமது உலகம் மாசடைதலை தடுப்பதற்கான செயற்பாடுகளில் தொடர்ந்து பொறுப்புடன் ஈடுபட்டு வருவார்களேயானால் பூகோளம் வெப்பமடைதலை



இயன்றளவு கட்டுப்படுத்த முடி யும். பூகோள வெப்பமாதலிலிருந்து எமது உலகை காப்பாற்றுவோம். (முற்றும்)


**து.பிரதீபன்**
**இரசாயனவியல் ஆசிரியர்,**
**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.**


## வாரத்திற்கு ஒரு புதிர்! 78

**அமில மழைக்குக் காரணமான வாயுக்கள் மூன்றின் பெயர்களைத் தருக?**

விடைகளை 25.02.2013 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**து.பிரதீபன்**
ஆசிரியர், பிரிவு -A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 77 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

சரியான விடை வெல்லப்படவில்லை.

**புதிர் 77 இற்கான கேள்வியும் விடையும்:**

தற்போதுள்ள நவீன ஆவர்த்தன அட்டவணையில் உள்ள மூலகங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

114

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 78**

சரியான விடை:-.................................................................
முழுப்பெயர்:-.................................................................
முகவரி:-.................................................................
தொ.பே. இல:.................................................................
கையொப்பம்:.................................................................

# பாதுகாப்பு தேடி வந்த தமிழர்களை திருப்பி அனுப்ப வேண்டாம்- சீமான்

**இலங்கையில் இருந்து பாதுகாப்பு தேடி கடந்த காலங்களில் தமிழகத்திற்கு வருகைதந்த ஈழத் தமிழர்களை திருப்பி அனுப்புவது மனிதாபிமானமற்ற செயல். அவர்களை அகதிகளாக பதிவு செய்து இங்கு வாழ தமிழக அரசு அனுமதிக்க வேண்டும். இவ்வாறு சீமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இலங்கையில் இப்போது போர் நடக்கவில்லை என்றும், எனவே, தமிழ்நாட்டிற்கு அகதிகளாக தஞ்சம் அடைய அனுமதிக்க முடியாது என்று பொலிஸ் மறுத்து வருவதாகவும் ஈழத் தமிழர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கைக்குச் சென்று மீண்டும் தமிழகம் திரும்பும் ஈழத்தமிழர்களை அகதிகளாக ஏற்க வேண்டாம் என்றும் இதற்கு மேல் இலங்கையில் இருந்து வரும் எவரையும் அகதிகளாக பதிவு செய்து ஏற்க வேண்டாம் என்றும் மறுவாழ்வுத்துறைக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் கூறுவது உண்மையா என்பதை தமிழக அரசு உடனடியாக விளக்க வேண்டும்.

இலங்கையில் சிங்களவர்களுக்கு இணையான அரசியல் சம உரிமை தமிழர்களுக்கு தரப்படும் வரை தொடர்ந்து போராடுவேன் என்று சட்டப் பேரவையிலே முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார். இலங்கையில் இன்னும் தமிழினம் இலங்கை அரசின் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில் இப்படிப்பட்ட ஒரு உத்தரவை பிறப்பித்திருப்பாரா என்கிற சந்தேகம் உள்ளது.

பாதுகாப்புத்தேடி தமிழகத்திற்கு வரும் ஈழத்தமிழர்களை திருப்பி அனுப்புவது மனிதாபிமானமற்ற செயல். இது இலங்கை அரசின் தமிழின அழித்தலுக்கு துணை போகும் நடவடிக்கை ஆகும்.

ஈழத்தமிழர்களை அகதிகளாக பதிவு செய்து இங்கு வாழ தமிழக அரசு அனுமதிக்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி கேட்டுக் கொள்கிறது என அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் விஸ்தரிக்கப்படும்

## 10 தாங்கிகள் நிர்மாணிக்கப்படும் என்றார் யாப்பா

(கொழும்பு)

**சபுஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய களஞ்சிய அளவை அதிகரிப்பதற்காக மேலும் 10 தாங்கிகளை நிர்மாணிக்கவுள்ளதாக பெற்றோலிய கைத்தொழில் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.**

பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்று முன்தினம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முதற் தடவையாக விஜயம் செய்தார்.

இந்நிலையில் இங்கு இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், இது தொடர்பிலான அறிக்கை பூர்த்தியாகியுள்ளதோடு அமைச்சரவை அனுமதி கிடைத்ததும் துரிதமாக நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

கடந்த காலங்களில் செய்து கொள்ளப்பட்ட சில ஒப்பந்தங்கள் காரணமாக எமக்கு பாதிப்பே ஏற்பட்டது. எரிபொருள் களஞ்சியத்தில் 1/3 பகுதியை ஐ.தே.க.குறைந்த விலைக்கு விற்றது. இவ்வாறான அரச சொத்துக்களை உருவாக்க அரசாங்கம் பெருமளவு நிதியை முதலீடு செய்கிறது.

ஊழியர்கள் தமது உழைப்பை வழங்குகின்றனர். அத்தகைய பெறுமதியான அரச சொத்துக்களை சொற்ப விலைக்கு விற்கும் காலமல்ல இது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை குறுகிய காலத்தில் பலப்படுத்த தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இதற்கு ஊழியர்களின் முழு ஒத்துழைப்பும் தேவை. பெற்றோலிய கைத்தொழிலுடன் தொடர்புள்ள பிரதான பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றை கட்டம் கட்டமாகத் தீர்க்க சில காலம் பிடிக்கும்.

சபுகஸ்கந்த களஞ்சிய அளவை விஸ்தரிப்பது குறித்து ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டதோடு அதன் அறிக்கை தயாராகியுள்ளது. இதன்படி புதிதாக 10 தாங்கிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. எரிபொருள் குழாய்கள் பழைமையானவை என்பதால் கசிவுகள் ஏற்பட்டு வருகிறது. இது தொடர்பிலும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை முழுமையாக திருத்தியமைக்க 1.5 பில்லியன் டொலர் தேவைப்படுகிறது. இதற்கான தொழில் நுட்பம் பற்றியும் எவ்வாறு சுத்திகரிப்பு மேற்கொள்வது, எந்தளவு கொள்ளளவு தேவை போன்ற விடயங்கள் குறித்து முழுமையான தெளிவு பெறப்பட்ட பின்னரே இது தொடர்பில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படும்.

எமது பாவனையாளர்கள் குறித்தும் பெற்றோல் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் குறித்தும் கவனம் செலுத்தியே எமது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.



எரிபொருள் தரம் தொடர்பில் கடந்த காலத்தில் சிக்கல்கள் ஏற்பட்டன. அண்மையில் கூட தரம் குறைவான எரிபொருள் எடுத்துவரப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டது. கடந்த கால தவறுகள் மீண்டும் நடைபெற இடமளிக்க முடியாது.

பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமையகம் அமைக்க நான் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராக இருந்த போதே எமது அமைச்சின் கீழுள்ள காணி வழங்கப்பட்டது. அதன்படியே இங்கு புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. இது புதிய கட்டடம் என்பதால் இதற்கு சாயம் பூசத் தேவையில்லை என்றார்.

அமைச்சரை வரவேற்பதற்கு சாயம் பூசுவதற்காக பல இலட்சம் ரூபா செலவிடப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையிலே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (அ-2)

## வாழைத்தோட்டத்தை துவம்சம் செய்த யானைக் கூட்டம்



(பூந்தோட்டம்)

வவுனியா அலைகல்லுப் போட்டகுளம் மீள்குடியேற்ற கிராமத்தினுள் நுழைந்த யானைகள் அங்கு பயிரிட்டப்பட்ட பயிர்களை நாசம் செய்ததுடன் வாழைத் தோட்டத்தினையும் முற்றாக அழித்துள்ளதாக அப்பகுதி வாழ் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஓமந்தை அலைகல்லு போட்ட குளப் பகுதியில் மக்கள் அடிப்படை வசதிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத நிலை மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்

இவர்கள் தோட்ட செய்கையினையும் நெற்பயிர் செய்கையினையும் நம்பியே தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துகின்றனர்.

இந்நிலையில் இரவு வேளைகளில் குடிமனைக்குள் நுழைகின்ற காட்டு யானைகளும் தென்பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்ட யானைகளும் வாழைத்தோட்டம் முதலிய பயிர்ச்செய்கைகளை அழித்து வருவதுடன் குடிசை வீடுகளையும் சேதப்படுத்துகின்றது.

கிராமத்தில் கோயில் மணிச்சத்தம் ஒலிக்கின்றபோது தென்பகுதியிலிருந்து கொண்டு வந்து விடப்பட்ட யானைகள் கிராமத்துக்குள் வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அக்கிராமத்தினை சூழவும் காடாக காணப்படுவதனால் தாம் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட காலத்தில் இருந்து யானைகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் மேற்படி பிரதேசத்திற்கு வருகை தந்து இப்பிரச்சினைக்கு தீர்வொன்றினை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(அ-2-250-266)

## அமெரிக்காவின் சித்திரவதை திட்டத்திற்கு எதிர்க்கட்சி தலைவர் ஆதரவு வழங்கினாரா?

### மன்மோகனின் மகள் கேள்வி

அமெரிக்க புலனாய்வுப்பிரிவின் சித்திரவதை நிகழ்ச்சித் திட்டத்துக்காக முன்னாள் பிரதம மந்திரியும் தற்போதைய எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுடன் உடன்படிக்கையை செய்து கொண்டாரா? என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கின் இளைய மகளான அம்ரிட்சிங் அமெரிக்காவின் நியூயோர்க்கில் அமைந்துள்ள திறந்த சமூக நிதியத்தின் ஊடாக கடந்த 5 ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

இந்தக் கேள்விக்கு இலங்கை அரசாங்கம் பதில் கூற வேண்டும் என்று அம்ரிட்சிங் கோரியுள்ளார்.

2001-2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமெரிக்கா மேற்கொண்ட பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளின் போது சிறைக்கைதிகளை பரிமாற்றம் செய்தல் மற்றும் தடுத்து வைத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு இலங்கை அமெரிக்காவுக்கு விமான தள வசதிகளை செய்து கொடுத்தது.

இதன்படி அமெரிக்க விமானங்கள் கட்டுநாயக்க விமானத்தளத்தில் தரித்துச் செல்லும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. இந்நிலையில் குறித்த அமெரிக்க புலனாய்வுத் திட்டத்துக்கு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் அமெரிக்காவுடன் உடன்படிக்கையை கொண்டிருந்ததா என்று அம்ரிட்சிங் கேள்வி எழுப்பியுள்ளார்.

நடைமுறை அரசாங்கம் ஒன்று நாடு என்ற வகையில் முன்னர் இருந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் பதிலளிக்கும் கடப்பாட்டை கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் தற்போதைய இலங்கை அரசாங்கம் இதற்கு பதில் வழங்க வேண்டும் என்று அமெரிக்காவில் சட்டத்தரணியாக இருக்கும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கின் மகள் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)





மு/சண்முகரட்ணம் வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள்விழா அண்மையில நடைபெற்றது. இந்நிகழ்வில் தரம் ஒன்று மாணவர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நுணுக்காய் கல்வி வலய நிர்வாக பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். அபிராமி மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறுவர் காப்பக விவகாரத்தால் நோர்வேக்கும் நெருக்கடி ஏற்படும்

நோர்வே சிறுவர் காப்பக விவகாரங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையில் எதிரொலிக்கும் சாத்தியங்கள் அதிகரிக்கின்றன.

இந்நிலையில் கடந்த 2012 செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி முதல் 2012 ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி வரையில் நோர்வேயில் ஒஸ்லோவில் அமைந்துள்ள டொம் தேவாலயத்தில் நடத்தப்பட்ட இலங்கை யாழ்ப்பாணத்து தாய்மாரின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு மதிப்பளிக்காத நோர்வே அரசாங்கமும் டொம் தேவாலய நிர்வாகமும் அந்தப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திவிட்டதாக சம்பந்தப்பட்ட தாய்மார் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள பெற்றோர் தமது கடுமையான விசனத்தை தெரிவித்துள்ளனர்.

நோர்வே சிறுவர் காப்பகங்களால் சிறுவர்கள் நடத்தப்படுகின்ற நிலைமைகள் குழந்தைகளை தாயிடமிருந்து அல்லது பெற்றோரிடமிருந்து பலவந்தமாக பிரித்து எடுத்துச் செல்கின்ற செயற்பாடுகள் சிறுவர் காப்பகங்களாலும் குறித்த பெற்றோர் மற்றும் வெளிநாட்டு வதிவிடவாளர்கள் நோக்கப்படுகின்ற நிலைமைகள் தொடர்பில் சர்வதேச நாடுகள் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளன.

அத்துடன் நோர்வே சிறுவர் காப்பக அதிகாரிகளின் நடவடிக்கைகள் தொடர்பில் ஐ.நா பேரவையும் தமது கண்டனத்தை வெளியிட்டிருப்பதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க இந்தியா, ரஷ்யா, போலந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் எதிர்ப்பினை எதிர்கொண்டுள்ள நோர்வே அரசாங்கம் இம்முறை இடம்பெறவிருக்கின்ற ஜெனீவா பேரவையின் கூட்டத்தொடரின் போது பல்வேறு அழுத்தங்களை எதிர் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நோர்வே சிறுவர் காப்பகங்களில் இலங்கையைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளும் வருடக்கணக்கில் சிக்குண்டிருப்பதால் இலங்கை அரசாங்கம் நிச்சயமாக இவ்விடயம் தொடர்பில் ஜெனீவா பேரவையில் கேள்வியெழுப்பும் என்று நம்பப்படுகிறது.

அத்துடன் நோர்வேயின் சிறுவர்கள் காப்பகம் சம்பந்தமாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அதனை நோர்வே அரசு ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் இவ்விடயத்தில் தமது நாட்டின் சட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தயாராக இருப்பதாகவும் இவ்விடயம் சம்பந்தமாக ஜெனீவா பேரவையில் கேள்வியெழுப்பும் பட்சத்தில் விளக்கவிருப்பதாகவும் அங்கிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

எது எப்படியோ நோர்வே சிறுவர் விவகாரம் தொடர்பில் ஜெனீவா பேரவையில் பதிலளிக்கும் கட்டாயத் தேவை ஒன்று நோர்வே அரசாங்கத்திற்கு எழுந்துள்ளது.

இந்நிலையில் சிறுவர் காப்பகம் மற்றும் சிறுவர்கள் தொடர்பிலான சட்டங்களை மாற்றியமைப்பதற்கு நோர்வே அரசாங்கத்திற்கு திட்டம் ஒரு புறம் இருந்தாலும் இரண்டு வருங்களுக்கு மேலாக தம்மிடம் இருந்து பிரித்து வைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகளை தம்மிடத்திலோ அல்லது தமது உறவினர்களிடத்திலோ ஒப்படைப்பதற்கு நோர்வே அரசு நடவடிக்கை எடுக்க ஜெனீவாவில் அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும் என பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுகின்றனர். (அ-2)

## இலங்கை கடற்பரப்பை நாம் பயன்படுத்தினோம்

### ஈரான் வீராப்பு

இலங்கைக் கடற்பரப்பை ஈரான் கடற் படையினர் பயன்படுத்தியதாக ஈரான் அறிவித்துள்ளது.

உலகின் ஏனைய நாடுகளைப் போன்றே ஈரானும் சர்வதேச கடற்பரப்பை பயன்படுத்திக் கொள்ள உரிமையிருப்பதாக ஈரானிய கடற்படைத்தளபதி ஹபிபுல்லாஹ் சய்யாரி தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாகவே சூடான், ஜெத்தா, இலங்கை மற்றும் லடாக்கியா போன்ற நாடுகளின் கடற்பரப்புக்களை ஈரான் கடற்படையினர் பயன்படுத்திக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிரிகளை தோற்கடிக்கவும் தேசத்தைப் பாதுகாக்கவும் எந்த இடத்தையும் பயன்படுத்திக் கொள்ள முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உலகின் பல பகுதிகளிலும் யுத்தக் கப்பல்களை நிலை நிறுத்தப் போவதாக கடந்த மாதம் ஈரான் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பேருந்து விபத்தில் 28 பேர் படுகாயம்

(கொழும்பு)

நிட்டம்புவ-தித்தவெல்மங்கடவ-வெவல்தெனிய பகுதியில் இரு பேருந்துக்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 28 பேர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து கெக்கிராவைக்கும் கண்டியிருந்து பாணந்துறைக்கும் சென்று கொண்டிருந்த இரு வெவ்வேறு இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் 22 ஆண்களும் 5 பெண்களும் ஒரு சிறுமியும் படுகாயமடைந்து வத்துபிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துடன் தொடர்புடைய ஒரு சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## கிழக்கில் முதலீடு செய்ய சவுதி அரசுக்கு விருப்பம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு சவுதி அரேபியா அரசாங்கம் முன்வந்துள்ளது என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

விவசாயம், கால்நடை, சுற்றுலா உள்ளிட்ட பல துறைகளில் கிழக்கு மாகாணம் உட்பட பல பிரதேசங்களில் குறித்த அரசாங்கம் முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்காக ஆறு பேர் கொண்ட சவுதி அரேபிய தூதுக்குழுவொன்று நேற்றைய தினம் இலங்கை வரவுள்ளது. இந்த குழுவினர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்க முக்கியஸ்தர்களை சந்தித்து முதலீடு தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளனர் என பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த தூதுக்குழுவினர் பாசிக்குடா மற்றும் புத்தளம் உள்ளிட்ட பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொண்டு முதலீட்டுக்கான சாதகங்களை பார்வையிடவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

சவுதி அரேபியா ஏற்கனவே பல மில்லியன் ரூபா முதலீடுகளை இலங்கையில் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கொழும்பில் வாகன நெரிசலை கண்டறிய துரித நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரில் வாகன நெருக்கடியை குறைப்பதற்கான வழிவகைகளை கண்டறிவதற்காக மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி கடந்த செவ்வாய்க்கிழமை மாத்திரம் 41 ஆயிரம் மென்ரக வாகனங்கள் நுழைந்ததாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 6 மணி தொடக்கம் நடத்தப்பட்ட இந்தக் கணக்கெடுப்பினால் கொழும்பிலும் புறநகரிலும் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது.

கொழும்பிற்குள் இவை வந்த நேரம், விட்டுப்போன நேரம், பயணிகள் எண்ணிக்கை, பயணத் தடங்கள், தரிப்பிடம் மற்றும் வேலை செய்யுமிடம் போன்ற விபரங்கள் இந்த கணக்கெடுப்பிற்கு வழங்கப்பட்ட படிவங்கள் மூலம் பெறப்பட்டுள்ளன.

அதிகரித்து வரும் வாகன நெருக்கடியை குறைக்கும் மாற்று ஒழுங்குகளை கண்டு பிடிக்கும்படி தாம் கேட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் கூறியது. அத்துடன் ஒரு வழி முறைமை வெற்றியளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்புடன் தொடுக்கும் புதிய வீதிகளை அமைப்பதற்கான பல முன்மொழிவுகளும் ஆராயப்பட்டு வருகின்றன. (அ-2)

## ஹெரோயின் வைத்திருந்த நால்வர் கைது

கண்டி-மஹியாவ பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் உட்பட நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ஆயிரத்து 456 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-2)

## காணாமல் போன பணிப்பாளர் மரத்தின் மேல் ஏறியிருந்த சம்பவம்

(ஆனமடுவ)

ஆனமடுவ பால் உற்பத்தியாளர்கள் கடன் பிரச்சினையை தீர்க்கச் சென்று காணாமற் போனதாகக் கூறப்பட்ட பிரபல நிதி நிறுவனக் கிளைப் பணிப்பாளர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் பிரசித்தி பெற்ற நிதி நிறுவனம் ஒன்றின் நுகேகொட கிளை பணிப்பாளர் டி.எம்.பிரேமசிறி நேற்று முன்தினமிரவு முதல் காணாமல் போயுள்ளாக தெரிவிக்கப்பட்டது.


குறித்த பணிப்பாளரரும் மற்றுமொருவரும் ஆனமடுவ பிரதேச பால் உற்பத்தியாளர்களின் கடன் பிரச்சினையை தீர்த்து வைக்க அங்கு சென்றனர்.

அங்கு சென்று மீண்டும் திரும்பிக் கொண்டிருந்தவேளை ஆனமடுவ தோனிகல காட்டுப் பகுதியில் ஒரு இடத்தில் இறங்கி தேவை ஒன்றுக்காக குறித்த பணிப்பாளர் குழுவுடன் சிறிது தூரம் நடந்து சென்றுள்ளார்.

அவ்வாறு சென்ற குழுவில் பணிப்பாளர் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து பணிப்பாளரை தேடி பொலிஸ் குழுக்கள் காட்டுப் பகுதியில் சோதனையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் தோனிகல காட்டு மரம் ஒன்றில் ஏறியிருந்த நிலையில் பணிப்பாளர் கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுக்குள் சென்று திரும்பியபோது பாதையை மறந்து அலைந்து திரிந்ததாகவும் பின்னர் செய்வதறியாது பாதுகாப்புக்காக மரத்திற்கு மேல் ஏறியிருந்ததாகவும் கண்டுபிடிக்கப்பட்ட பணிப்பாளர் கூறியுள்ளார். (அ-2)



இணுவில் ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி தேவஸ்தானத்தில் அண்மையில் நடைபெற்ற திருவாசக முற்றோதலின்போது தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தாணு மகாதேவக் குருக்களால் தேவாரு இசைமணி கலாபூஷணம் துறைசை ஆதீன திருமறைத் தோன்றல் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்த ஓதுவர் மூர்த்திகளுக்கு பட்டாடை வழங்கி கௌரவித்ததைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தைக் நிச்சயம் அடைந்துவிடலாம்.
–ஹில்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வீதிகள் உயர்ந்தன; வீடுகள் பதிந்தன வெள்ளம் வழிந்தோடுமா? வீடு புகுந்துகொள்ளுமா?

மன்னனின் சபையில் வேந்தனைப் புகழ்ந்து வாழ்த்துகின்றனர் புலவர்கள். அங்கிருந்த ஒளவையார் வரப்புயர என்று கூறிவிட்டு அமர்கின்றார்.

ஒளவையார் கூறியதன் பொருள் உணர முடியாத புலவர்கள் ஒளவையே! இஃது என்ன என்று வினவ, ஒளவையார் குடியுயர்ந்தால் கோன் உயர்வான் என்று பாடி முடிகின்றார்.

ஒருகாலத்தில் வரப்புயர என்பது இப்போது எங்கள் மண்ணில் வீதியுயர என்றாகியுள்ளது.

ஆம்! வீதிப் புனரமைப்பால் பிரதான வீதிகள் அனைத்தும் உயர்ந்துகொள்ள வீடுகள் தாழ்ந்து கொண்டன.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை மழை நீர் வடிந்தோடுவதற்குப் பொருத்தமான வடிகால் முறைகள் இல்லையென்று கூறலாம்.

பொதுக் கட்டிடங்களைக் கட்டுகின்றபோதுகூட நீர்வழிந்தோடுவதற்கான வழிவாய்க்கால் பற்றிக் கவனிப்பது இல்லை.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் உள்ள சந்தைகளை எடுத்துக் கொண்டால், அங்கு மழை நீர் தேங்கி நிற்பதைக் காண முடியும்.

மழைநீர் தேங்குவதற்காக உள்ள இடங்களில் சந்தைகளும் ஒன்று என்பதுபோல நிலைமை உள்ளது.

இதுபோலத்தான் பஸ் தரிப்பு நிலையங்கள் உட்பட பல பொது அமைப்புகள் மழை வெள்ளத்தைத் தாங்கும் நிலையங்களாக உள்ளன.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் மழை வெள்ளம் வழிந்தோடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படாமையாகும்.

இப்போதுகூட புனரமைக்கப்படும் வீதிகள் மிகவும் உயர்ந்துள்ளன. இந்த உயர்வு காரணமாக பிரதான வீதிகளில் இருந்து செல்லும் கிளை வீதிகளுக்கு இறங்குவது என்பது பாதாளத்தில் இறங்குவதுபோல ஆயிற்று.

இதற்கு அப்பால் வீதியின் உயர்வு காரணமாக வெள்ளம் வழிந்தோட முடியாமல் வீட்டு வளவுகளில் தேங்குவதை யாழ்.குடாநாட்டில் பெய்கின்ற மழை சுட்டிக்காட்டுகின்றது.

ஒருசிறு மழைக்கு இத்தகைய வெள்ள நிலைமை என்றால் எதிர்காலத்தில் – மாரி காலத்தில்– நிசா போன்ற வெள்ளப்பெருக்கு காலத்தில் நிலைமைகள் எப்படியாகும் என்பதை சொல்லித்தான் தெரியவேண்டுமென்பதில்லை.

எனவே, வீதி புனரமைப்பு என்பது அத்தியாவசியமானது என்பதற்கப்பால் மழை வெள்ளம் வழிந்தோடுவதற்கான ஏற்பாடுகளையும் முற்கூட்டியே செய்வது கட்டாயமானதாகும்.

இதுதொடர்பில் துறைசார் நிபுணர்கள் கூடி ஆராய்ந்து மழை வெள்ளம் வழிந்தோடுவதற்கு வேண்டிய வடிகால் அமைப்புகளை முன்கூட்டியே திட்டமிட்டு அமைத்தல் வேண்டும்.

இதைவிடுத்து வெள்ளம் வந்தபின்னர் அது பற்றி சிந்திக்கலாம் என்று நினைத்தால், வெள்ளப் பெருக்கால் மக்கள் இடப்பெயர்வு என்ற நிலைமைகள் நீடிக்கவே செய்யும்.

ஆகவே வரும்முன் காத்தல் என்ற அடிப்படையில் வெள்ளம் தேங்கக்கூடிய இடங்களை இனங்கண்டு அதற்கான மாற்றுவழிகளைச் சிந்தித்து செயலாற்றுவது மிகமிக அவசியம்.

# மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பை ரத்துச் செய்யக் கோரி மனுத்தாக்கல்

பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான கண்டன பதவி நீக்கத் தீர்மானம் சட்டவிரோதமானது என அண்மையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்திருந்த தீர்ப்பை இரத்துச் செய்யக்கோரும் மனுஒன்றை உச்சநீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

தவிர இந்த மனு தொடர்பாக விளக்கம் அளிப்பதற்காக நீதிமன்றில் ஆஜராகும்படி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு உச்சநீதிமன்றம் அறிவித்தல் விடுத்துள்ளது.

கம்பஹா பிரதேசத்திலுள்ள டபிள்யூ ஹேவகே என்பவரால் மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிபதி ஷிராணி திலகவர்த்தன தலைமையில் 3 நீதிபதிகள் அடங்கிய குழு இந்த மனுவை நேற்று வியாழக்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

மார்ச் 5-ம் திகதி இந்த மனு விசாரிக்கப்படும் என உச்சநீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

தனக்கெதிரான கண்டன பதவிநீக்க நடைமுறையை எதிர்த்து ஷிராணி செய்திருந்த மனுவை அண்மையில் விசாரித்திருந்த மேன்முறையீட்டு நீதிமன்றம், நாட்டின் தலைமை நீதிபதியை விசாரிக்க அந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அதிகாரம் இல்லை எனத் தீர்ப்பளித்திருந்தது.

ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பு நாட்டின் அரசியல் யாப்பிற்கு முரணானது என்று தற்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ–11)

# மகா சிவராத்திரி போட்டிகள்

உரும்பிராய் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ கண்ணகா பரமேஸ்ரி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரால் மகா சிவராத்திரியினையொட்டி நடத்தப்படுகின்ற சமய அறிவுத் தேர்வு பேச்சு பண்ணிசைப் போட்டிகள் எதிர்வரும் 23-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் சைவத்தமிழ்வித்தியாலயத்தில்நடைபெறும்.

இப் போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை உரும்பிராய் கிழக்கு சிவன் வீதியில் அமைந்துள்ள ஐங்கரன் தொலைத்தொடர்புநிலையத்திலும்உரும்பிராய் கிழக்கு சிவன் வீதியில் அமைந்துள்ள செல்வம் அன்றி கல்வி நிலையத்திலும் ஆலய பரிபாலன சபை அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு மகா சிவராத்திரி தினத்தன்று ஆலயத்தில் நடைபெறுமென்பதை போட்டி இணைப்பாளர் மதுரகவி காரை எம்.பி அருளானந்தன் அறிவித்துள்ளார். (அ–2–136)

## மனதில் சஞ்சலமா; தீர்வு தருகிறது கீதை

(யாழ்ப்பாணம்)

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு வேதாந்த மடத்தின் ஏற்பாட்டில் யாழ்.சின்மயா மிஷன் நடத் தும் இலவச ஞானயக்ஞம் நாளை சனிக்கிழமை முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை வரை தின மும் பிற்பகல் 6 மணி முதல் 7.30 மணி வரை இல.18, குமாரசுவாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலமைந்த வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது.

மனதில் சஞ்சலமா தீர்வு தருகிறது கீதை என்னும் தலைப்பில் அரு ளுரைகளை யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா வழங்கவுள்ளார். (அ–5)

## நினைவு பகிர்தல்

மூத்த ஊடகவியலாளர் அமரர் சங்கரின் நினைவு பகிர்தல் எதிர்வரும் 22-ம்திகதி மாலை 4.30 மணிக்கு சைவ பரிபாலனசபை மண்டபத்தில் ஐயா சச்சிதானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

## கலந்துரையாடல்

கரவெட்டி பிரதேச செயலகத்தில் இவ்வாண்டுக்கான பிரதேச விளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

எனவே, இக்கலந்துரையாடலுக்கு கழகத்தலைவர் அல்லது செயலாளரைத் தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ கேட்டுள்ளார். (அ–2)

# விளையாட்டுப் போட்டி பிற்போடப்பட்டது

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் ரி.சண்முகசுந்தரமூர்த்தி அறிவித்துள்ளார்.

★ ★ ★ ★ ★ ★

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடைபெற இருந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி சீரற்ற காலநிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என்பதனையும், உரியதிகதிபின்னர் அறிவிக்கப்படும்எனவும் அதிபர்பி.தனபாலசிங்கம் அறிவித்துள்ளார்.

★ ★ ★ ★ ★ ★

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப் பட்டபோதும் சீரற்ற காலநிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் திருமதி எம்.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

★ ★ ★ ★ ★ ★

யா/கெருடாவில் இந்து தமிழ்கலவன் பாடசாலையின் இவ்வாண்டிற்கான இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று நடைபெறவிருந்த நிலையில் அடை மழை காரணமாக பிறிதொரு திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என பாடசாலையின் அதிபர் க. உதயரூபன் தெரிவித்துள்ளார்.

★ ★ ★ ★ ★ ★

யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 21-ம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவ் இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று வெள்ளிக் கிழமை இடம்பெற இருந்தபோதும் தவிர்க்க முடியாத கார ணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகபாடசாலை விளையாட்டுத்துறைசெயலாளர் தி.ரவீந்திரநாதன் அறிவித்துள்ளார். (எ–5)

★ ★ ★ ★ ★ ★

யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் கு.ஜெகநாதன் அறிவித்துள்ளார். இப் போட்டி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

விளையாட்டுப் போட்டித் தொடர்பில் முன்னர்வந்த செய்தியும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதனைத் திருத்தி வாசிக்கவும். (எ–11)




அலைபாயும் மனித மனத்தைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன வழி எனப் பல ஆய்வுகள் நடைபெறுகின்றன. நமது முன்னோர் மனத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்துள்ளனர். எமது ஐம்பொறிகளாலும் எமது புலன்கள் முரண்படாதிருக்கும் வண்ணம் செயற்படுவதே மனத்தைக் கட்டுப்படுத்துவதற்குச் சிறந்த வழியாகும். புலன்கள் முரண்படாது செயற்படுவதற்கு வழிபாடு பேருதவி செய்யும். இக்கருத்தினை மணிவாசகர் அனுபவத்தாலுணர்ந்து பாடல்களிலே பதிவுசெய்துள்ளார்.

இறைவன் தன்னை வலிய வந்து ஆட்கொண்டபோதும் தான் ஐம்புலன்களின் நுகர்ச்சியை மேற்கொண்டு இறைவனை விட்டுப் பிரிந்ததை எண்ணி வருந்துகிறார். குருவிடம் உபதேசம் பெற்ற பின்னரும் ஐம்புலன்களின் நுகர்ச்சியை விரும்பிச்சென்ற பிழையை உணர்கிறார். எனவே மீண்டும் இறைவனே தன்னை வந்து மீட்டருளவேண்டுமெனப் புதிய வழிபாடு செய்கிறார்.

உலகத்திற்குத் தீமை செய்யும் பகைவர் உன்னைக்கண்டு அஞ்சும்படி தண்டஞ்செய்து கொல்லும் தன்மையுடைய அழகிலை வடிவமான வேலைச் செலுத்த வல்ல பேராற்றல் படைத்தவனே! திரு உத்தரகோச மங்கை என்னும் தலத்திற்கு அரசே! என இறைவனுடைய ஆற்றலை முதலில் நினைந்து வழிபடுகிறார். தளர்ச்சியடைந்துள்ள தான் பருகுவதற்குரிய தெளிந்த பெரிய அமுதக் கடலே என இறைவனைப் போற்றுகிறார். தெளிந்த நீர் மனிதருடைய தளர்ச்சியைப் போக்கவல்லது. ஆனால் இறைவனோ அமுதக்கடல் போன்றவன். அமுதம் மரணமற்ற வாழ்வைத் தருவது. இறைவனுடைய திருவருளையே மணிவாசகர் அமுதமெனக் குறிப்பிட்டுள்ளார். எனவே பேரருள் கொண்ட இறைவனை வழிபட்டால் எல்லாவற்றையும் நாம் பெறமுடியும்.

மணிவாசகர் இறைவனைப் பிரிந்து சென்றமைக்கு ஐம்புல நுகர்ச்சியே காரணமென்கிறார். குருவின் உபதேசத்தைக் கேட்டும் அவர் மனம் பக்குவம் அடையவில்லை. மந்திரியாக வாழ்ந்தபோது அவர் அனுபவித்த உலக இன்பங்களை அவரால் விட்டுவிடமுடியவில்லை. இதனால் அடிக்கடி அரசே என இறைவனை அழைக்கிறார். பாண்டிய அரசனோடு இறைவனை அவர் மனம் ஒப்பிட்டுப் பார்க்கிறது. உத்தரகோசமங்கையின் அரசனின் அற்புத ஆற்றலும் பேரருளும் மிக உயர்ந்தவை என்பதை உணர்ந்து கொள்கிறார். இறைவன் தன்னை அடிமையாக்கிய அற்புதத்தை உணர முடியாதிருந்ததை விளக்கிக்கூற முனைகிறார். வலிய வந்த வாய்ப்பைத் தவறவிட்டமையை நன்குணர்கிறார்.

எனவே இறைவனிடம் தன்னைக் கைவிட்டு விடவேண்டாமென விண்ணப்பிக்கிறார். நெடுந்தகை என மணிவாசகர் இறைவனுக்குச் சூட்டும் பெயர் அவருடைய மனப்பக்குவத்தைப் புலப்படுத்தி

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

நிற்கிறது. இறைவன்தன்னை ஆட்கொண்ட கோலத்தையே மீளவும் நினைத்துப் பார்க்கிறார். ஒருவர் தவறு செய்தால் அதற்கான காரணத்தை அறிய முற்படுவது போல மணிவாசகரும் தன் தவறுக்கான காரணத்தைத் தெரிந்து கொண்டமையால் அதனைப் பாடல்களிலே விரிவாகவே எடுத்துக்கூறியுள்ளார். மனத்தைக் கட்டுப்படுத்த இறைவனைப் பற்றிய எண்ணங்களை மனதிலே மீளப் பதிவு செய்வது நன்று என மணிவாசகர் பாடல் மக்களை ஆற்றுப்படுத்துகிறது.

நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள
யான் ஐம்புலன்கள் கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண்
டாய் விர வார் வெருக
அடுந்தகை வேல்வல்ல உத்தர
கோச மங் கைக்கரசே
கடுந்தகை யேன் உண்ணுந் தெண்ணீர்
அமுதப் பெருங்கடலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்றுவிப்பாளர்களாக நியமனம்


அத்தப்பத்து



சமிந்த வாஸ்

இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக கடமையாற்றிவரும் மாவன் அத்தப்பத்து உதவி பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து உதவி பயிற்றுவிப்பாளர் பொறுப்பை ஏற்கவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதனிடையே, பங்களாதேஸ் கிரிக்கட் அணிக்கு எதிரான போட்டிகளின் போது இலங்கை கிரிக்கட் அணிக்கு சமிந்த வாஸ் பயிற்றுவிப்பாளராக செயற்படவுள்ளார்.

## டெஸ்ட் அணித் தலைவராக அஞ்சலோ மெத்தியூஸ் நியமனம்



பங்களாதேசுடனான டெஸ்ட் தொடரிற்கு இலங்கை அணியின் தலைவராக அஞ்சலோ மெத்தியூஸ் நியமிக்கப்பட்டுள்ளார. அத்துடன் உப தலைவராக தினேஷ் சந்திமாலும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை வரவுள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் மூன்று ஒரு நாள் சர்வதேச போட்டிகளிலும் ஒரு ருவெண்டி ருவெண்டி சர்வதேச போட்டியிலும் பங்குபெறவுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி மார்ச் 8ஆம் திகதி காலியில் இடம் பெறவுள்ளது.

**டெஸ்ட் அணி விபரம்:** அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சந்திமால், திலகரட்ண டில்ஷான், திமுத் கருணாரத்ன, ஆஷென் சில்வா, குமார் சங்கக்காரா, லஹிரு திரிமன்ன, மஹேல ஜெயவர்தன, குஷால் ஜனித் பெரேரா, ஜீவன் மென்டிஸ், கித்துருவன் வித்தானகே, அஜந்த மென்டிஸ், சுராஜ் ரந்தீவ், நுவான் குலசேகர, ஷமின்ட எரங்க, சானக வெலகதெர, நுவான் பிரதீப், துஷ்மந்த சமீர, ரங்கன ஹேரத், தரிந்து கௌஷால்.

## இலங்கை அணியின் அனுசரணைக்கு பல நிறுவனங்கள் போட்டி

Sri Lanka Cricket


இலங்கை கிரிக்கெட் அணியின் தற்போதைய அனுசரணையாளர்களான "மொபிடெல்" நிறுவனம் தனது அனுசரணையைப் புதுப்பிக்காது விட முடிவு செய்ததையடுத்து புதிய அனுசரணைக்கான ஏலங்களை இலங்கைக் கிரிக்கெட் சபை கோரியிருந்தது.

இந்நிலையில் முன்னெப்போதும் இல்லாதவாறு பில்லியன் கணக்கான ஏலத்தொகை பெறப்பட்டிருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இலங்கையின் முன்னணிக் கைத்தொலைபேசி வலையமைப்பான டயலொக் அக்ஸியற்றா, இலங்கைத் தேயிலைச் சபை, மடிசன் மீடியா மற்றும் ரோற்றல் ஸ்போர்ட்ஸ் ஏசியா ஆகிய நிறுவனங்கள் முன்வந்துள்ளதாகவும், இவற்றில் 2 நிறுவனங்கள் 2 பில்லியனுக்கும் அதிகமான ஏலத்தொகையைக் கோரியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதில் அனுசரணையாளராகத் தெரிவுசெய்யப்படுபவர் இலங்கையின் பெண்கள், ஆண்கள் தேசிய அணிகளின் அனுசரணையாளர்களாகச் செயற்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மல்யுத்தம் நீக்கப்பட்டமையால் பல நாடுகள் அதிர்ச்சி



2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் இருந்து மல்யுத்தத்தை நீக்க சர்வதேச ஒலிம்பிக் சங்கம் எடுத்த முடிவானது ரஷ்யா, அமெரிக்கா, இந்தியா என பல நாடுகளை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

இது குறித்து இந்திய விளையாட்டு அமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், பிரபலமான நாடுகளுடன் இணைந்து இந்த பிரச்சினையை மத்திய விளையாட்டு அமைச்சகம் எதிர்கொள்ளும். அத்துடன் மல்யுத்த நீக்க முடிவை மறுபரிசீலனை செய்து ஒலிம்பிக் போட்டியில் மல்யுத்தம் தொடர நடவடிக்கை எடுக்கும்படி சர்வதேச ஒலிம்பிக் கவுன்சிலை வலியுத்துவோம். எங்களின் நடவடிக்கையால் ரஷ்யாவில் மே மாதம் நடைபெறும் சர்வதேச ஒலிம்பிக் சங்க செயற்குழு கூட்டத்தில் மல்யுத்தத்தை ஒலிம்பிக்கில் தொடர முடிவு எடுக்கப்படும் என்று நம்புகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தியக் கிரிக்கெட் சபையின் கெடுபிடியால் ஆஸி. ஊடகங்கள் போர்க்கொடி

இந்திய கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ) கடுமையான கெடுபிடி காரணமாக டெஸ்ட் தொடரை புறக்கணிக்க அவுஸ்திரேலிய ஊடகங்கள் முடிவு செய்துள்ளன.

இந்தியாவில் நடைபெறும் கிரிக்கெட் தொடர்களை நேரடி ஒளிபரப்பு செய்வது உள்ளிட்ட பல விடயங்களில் இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) அதிக கெடுபிடி செய்து வருகிறது. சமீபத்திய இங்கிலாந்து தொடரின்போது கெட்டி, அக்ஷன் இமேஜ் நிறுவனங்களுக்கு அனுமதி மறுத்தது.

பி.சி.சி.ஐ., வெளியிடும் படங்கள் மட்டுமே ஊடகங்களில் வெளியாகின. இதையடுத்து, கிரிக்கெட் தொடரபான படங்களை கார்ட்டூனாக வெளியிட்டு பத்திரிக்கைகள் எதிர்ப்பை காட்டின.


தற்போது அவுஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரை நேரடி ஒளிபரப்பு செய்ய பி.சி.சி.ஐ. அதிக தொகை கேட்டதால் அங்குள்ள தொலைக்காட்சி நிறுவனங்கள் பின்வாங்கி விட்டன. தற்போது மீண்டும் புகைப்பட நிறுவனத்துக்கு பி.சி.சி.ஐ., அனுமதி மறுத்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் பெரும்பாலான ஊடகங்களுக்கு படங்கள் வழங்கி வரும் “கெட்டி”(Getty) நிறுவனத்துக்கு அனுமதி இல்லாததால் மற்ற அனைவரும் ஒன்று சேர்ந்து இந்திய டெஸ்ட் தொடரை புறக்கணிக்க முடிவு செய்தனர்.

இது குறித்து “தி நியூஸ்பேப்பர் ஒர்க்ஸ்” தலைமை அதிகாரி டோனி ஹேல் கூறுகையில், பி.சி.சி.ஐ., முடிவு ரசிகர்களுக்கு கிரிக்கெட் மீது ஆர்வம் இல்லாமல் செய்துவிடும்.

ஊடகங்களிடம் பாரபட்சம் காட்டக்கூடாது என்றும் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) இவ்விடயத்தில் தலையிட வேண்டும் எனவும் கூறினார்.

## திருமண பந்தத்தில் இணைந்தார் புஜாரா



இந்திய கிரிக்கெட் அணியின் வளர்ந்து வரும் துடுப்பாட்ட வீரரான புஜாராவுக்கும் ராஜ்கோட்டையைச் சேர்ந்த தொழில் அதிபரின் மகளும், எம்.பி.ஏ. பட்டதாரியுமான புஜா பாப்ரிக்கும் திருமணம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள் மட்டுமே திருமணத்துக்கு அழைக்கப்பட்டு இருந்தனர்.

அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் இடம் பெற்றுள்ள புஜாரா நாளை 16 ஆம் திகதி இந்திய அணியோடு இணைந்து கொள்வார். புஜாரா 9 டெஸ்டில் விளையாடி 761 ஓட டங்கள் எடுத்துள்ளார். சராசரி 58.00 ஆகும். 3 சதம் அடித்துள்ளார்.

## வருகிறது தடை; பாக். ஒலிம்பிக் சங்கத்திற்கு!

அரசியல் தலையீடு காரணமாக பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்கத்திற்கு சர்வதேச ஒலிம்பிக் சபை (ஐ.ஒ.சி.,) தடை விதிக்கவுள்ளது.

இந்திய ஒலிம்பிக் சங்கத்தை (ஐ.ஒ.ஏ.,), சர்வதேச ஒலிம்பிக் சபை (ஐ.ஒ.சி.,) கடந்த டிசெம்பர் மாதம் தடைசெய்தது.


தற்போது பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்கத்தில் அந்நாட்டு அரசின் தலையீடு அதிகமாக உள்ளதாம். இதையடுத்து இந்தியாவை போல பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்கத்திற்கும் ஐ.ஒ.சி., தடைவிதிக்க முடிவு செய்துள்ளது.

கடந்த சில மாதங்களாக பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்க அதிகாரிகள், தங்களின் நிர்வாகத்தில் அரசு தலையிடுவதாக முறைப்பாடு தெரிவித்தனர்.

இதையடுத்து ஐ.ஒ.சி., பாகிஸ்தான் அரசை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. ஆனால் பாகிஸ்தான் அரசு இதை நிராகரித்தது. இதையடுத்து பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்கத்திற்கு ஐ.ஒ.சி., தடைவிதிக்க முடிவு செய்துள்ளது.

ஐ.ஒ.சி., ஒருநாட்டு ஒலிம்பிக் சங்கத்திற்கு தடைவிதித்தால் அந்நாட்டு ஒலிம்பிக் சங்கத்திற்கு வழங்கப்படும் நிதியுதவிகள் நிறுத்தப்படும். தவிர, சர்வதேச ஒலிம்பிக் சங்கம் நடத்தும் எந்த போட்டியிலும் வீரர், வீராங்கனைகள் அந்நாட்டு தேசிய கொடியுடன் பங்கேற்க முடியாது. ஆனால் ஐ.ஒ.சி., கொடியுடன் வீரர்கள் பங்கேற்கலாம்.

## சர்வதேச கார் பந்தயம் அமெ.வீரர் சம்பியன்



எம்.ஆர்.எஃப். கிண்ணத்திற்கான சர்வதேச கார் பந்தயத்தில் அமெரிக்காவின் கானர டேலி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தார்.

கடந்த ஆண்டு முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட இப்போட்டியின் இறுதி சுற்றுகள் இந்தியாவில் நடைபெற்றன.

இச்சுற்றுக்களில் 164 புள்ளிகளைப் பெற்ற கானர் டேலி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். பிரிட்டன் வீரர்களானஜோர்டான் கிங் 159 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தையும், லூஸியானா பசேட்டா 102 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தையும் பிடித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அர...

களில் இலங்கை அரசாங்கம் முற்று முழுதாக சிறப்பாக செயற்பட்டுள்ளது என்று கூறமுடியாது. அதன் செயற்பாடுகளில் முழுமையாக திருப்தியடைய முடியாது.

எனினும் இதனைக் காரணம் காட்டி இலங்கை அரசாங்கத்தை புறக்கணிக்க முனைவது, இந்த விடயங்களில் மேலும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் அவுஸ்திரேலியா கலந்து கொள்ள வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

அத்துடன் பொதுநலவாய அமைப்பின் ஏனைய உறுப்பு நாடுகளுக்கும், இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அவுஸ்திரேலியா அறிவுறுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## வலி.வடக்கில்...

இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, புதிய ஜனநாயக மாக்சிய லெனினிசக் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் ஆதரவு வழங்கியுள்ளன.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட அக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பல அரசியல் தலைவர்களும் பங்கு கொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்டபடி இன்று மாலை நடைபெறும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-6)

## இடைக்கால நிர்வாகத்துக்கான...

அக்கட்சியினரால் மேற்படி விடயத்தை வலியுறுத்தி அறிக்கையொன்றும் விடுக்கப்பட்டது.

அந்த அறிக்கையில்,

கடந்த வருடம் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையானது இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலினையும் மேம்படுத்தல் என்ற தலைப்பில் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது.

மேற்படித் தீர்மானமானது இலங்கை அரசாங்கத்தினை நல்லிணக்க ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட சிபார்சுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் நீதியையும், ஒப்புரவையும், பொறுப்புக்கூறலையும், நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்த சுயாதீனமானதும் நம்பத்தகுந்ததுமானதும் தனது சட்டக் கடமைகளை நிறைவேற்றத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரியிருந்தது.

கடந்த வருடம் மார்ச் மாதம் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது எம்மால் வெளிப்படுத்தப்பட்ட அச்சமும் அக்கறையும் துரதிர்ஷ்டவசமாக தற்போது உண்மையென நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த தீர்மானமானது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தினால் நிறைவேற்றப்பட்டும்கூட இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ள தமிழ் மக்களின் தாயக பூமியானது கீழே விபரிக்கப்படும் முக்கியமான விடயங்கள் உட்பட பலவற்றுக்கு ஆட்பட்டிருக்கின்றது.

தமிழ் மக்களை அவர்களின் சொந்த தாயக பூமியில் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக்கும் நோக்கில் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்.

தமிழ் மக்களின் தனிப்பட்ட சொந்தக் காணிகள் அரசால் பறிமுதல் செய்யப்படுதல், இராணுவ ஆக்கிரமிப்பு, கலாசார அடையாளங்களை மாற்றும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் கட்டாய சிங்கள பௌத்தமயமாக்கல், தமிழ் மக்களின் சுதேசிய பொருளாதாரத்தை திட்டமிட்டு அழித்தல் போன்றன.

இதனை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையானது பெருமளவில் உறுதிப்படுத்துகின்றது.

மேற்கூறப்பட்ட விடயங்களை நல்லிணக்கமும், பொறுப்புக்கூறலும் இன்மையினாலே நடைபெறுகின்றது எனப் பார்க்கக்கூடாது. மாறாக தமிழ் மக்களின் அடையாளங்களை அழித்து அவர்கள் ஓர் தனித்துவமான தேசமாக இருப்பதனை இல்லாமல் செய்யும் நோக்கிலான திட்டமிட்ட சிங்களமயமாக்கல் என்றே நோக்கப்படல் வேண்டும் என்பதனை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

தமது அரசியல் நலன்களுக்காக பயங்கரவாதத்தை தோற்கடித்தல் என்ற பேரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அழிவை ஐ.நாவும், சர்வதேச சமூகமும் பார்க்க விரும்பியதால் தமிழ்த் தேசம் மீதான இன(ப்படுகொலை) வழிப்புப் போர் அரங்கேறியது.

எது எவ்வாறாயினும் யுத்தம் முடிபடைந்து மூன்றரை வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் தமிழ்த் தேசமானது ஓர் கட்டமைப்புசார் இனவழிக்கை எதிர்கொண்டு வருகின்றது.

இவற்றிற்கிணங்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது, இனப்படுகொலை உட்பட சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் சுயாதீனமானதும் நம்பகத்தன்மை கொண்டதுமான சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்றினை நடத்த வேண்டும் என மீண்டும் வலியுறுத்துகின்றது.

அத்துடன் பாதுகாப்பதற்காக கடமை என்னும் கோட்பாட்டையும், தமிழ் மக்களின் தாயக பூமியான இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் ஓர் இடைக்கால நிர்வாகம் ஒன்றினை உருவாக்குதல் என்பதையும் உள்வாங்கி ஓர் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளைக் கோருகின்றோம்.

இத்தகைய இடைக்கால நிர்வாகமானது கட்டாயமாக தற்போதைய இலங்கையின் அரசியல் அமைப்பு கட்டமைப்புக்கு வெளியில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இதுபோன்ற நடவடிக்கைகள் தமிழ்த் தேசத்தின் அழிப்பைத் தடுக்க உதவும் என்பதுடன் எதிர்காலத்தில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண உதவும்.

மேலும் இத்தகைய இடைக்கால நிர்வாக சபையானது பொறுப்புக்கூறல் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுவதற்கு மட்டுமல்லாது இருக்கும் ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கு உதவும் என நாம் கருதுகின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## நல்லூர் பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் 2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01-ம் திகதி முதல் நல்லூர் பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08-ம் திகதிய NP/05/01/GE6/UNS/RQ இலக்க கடிதத்திற்கமைவாகவும், கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### சேவை நிபந்தனைகள்

1. இப்பதவி நிரந்தரமானதும், ஒய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஒய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

### அடிப்படைத் தகைமைகள்

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கெனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஒய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர்வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
5. தொழில்நுட்பம்சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

### தெரிவு செய்யப்படும் முறை

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

### விண்ணப்பிக்கும் முறை

1. நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா இருபதைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி தகைமைகளுக்காதாரமான சான்றிதழ்களின் உறுதிப் படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2. விண்ணபத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3.விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.
5. ஆட்சேர்ப்பு திட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ, நியமத்தின் பின்னராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச் சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

### விண்ணப்ப முடிவுத்திகதி

2013.02.28ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### பதவிகள்

1. காரியாலய காரிய சகாயர் பதவி (வெற்றிடம் - 01)
2. நூலக பரிசாரகர் பதவி (வெற்றிடம் - 01)
3. வேலை/வெளிக்களத் தொழிலாளி பதவி (வெற்றிடம் - 03)
4. சுகாதாரத் தொழிலாளி பதவி (வெற்றிடம் - 16)
5. மயானத் தொழிலாளி பதவி (வெற்றிடம் - 01)

**கல்வித் தகைமை**

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கும் மேற்படாத அமர்வுகளில் தமிழ்/சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

2007.08.24-ம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-1-2006-A ஆகும்.

**6.மின்னிணைப்பாளர் பதவி (வெற்றிடம் - 01)**

**கல்வித்தகைமை**

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கும் மேற்படாத அமர்வுகளில் தமிழ்/சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தொழில்சார் தகைமை**

இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதித் திகதியன்று ஆறு மாதங்களுக்கு குறையாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

2007.08.24-ம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-2-2006-A ஆகும்.

**7. சாரதி பதவி (வெற்றிடம் - 02)**

**கல்வித்தகைமை**

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்/சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள்**

6. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்கு குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று (03) வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
7. மோட்டார் வாகனச் சாரதியாக மூன்று (03) வருட அனுபவத்திற்கான சான்றிதழ்
8. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 2 1/2 அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
9. விண்ணப்பதாரி இரவு, பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக் கொண்டதுடன், சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
10. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

2007.08.24-ம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-2-2006-A ஆகும்.

2013.02.14
திகதி

திரு.மே.சாந்தசீலன்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

(C-2432)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் வெள்ள...

இரு நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகின்ற நிலையில் வெள்ளம் காரணமாக இதுவரையில் 943 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 561 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்துள்ள இம் மக்கள் 4 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பண்டிக்கெய்த கிராம அலுவலகர் பிரிவிலுள்ள பெரியமடு அம்மன் வித்தியாலயத்தில் 37 குடும்பங்களைச் சேர்ந்த 132 பேரும் புளியங்குளம் வடக்கிலுள்ள பழைய அரைக்கும் ஆலை ஒன்றில் 41 குடும்பங்களைச் சேர்ந்த 139 பேரும் பழைய வாடி கிராம அபிவிருத்தி அமைப்பிலுள்ள நலன்புரி நிலையத்தில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேரும் பிரப்பைமடுக் கிராமத்திலுள்ள பொது மண்டபமொன்றில் 831 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 220 பேரும் தங்கவைக்கப்பட்டுள்ளதாக வவுனியா அனர்த்த முகாமைத்துவ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்கு அந்தந்த கிராம அலுவலகர் பிரிவுகளினூடாக சமைத்த உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந் நிலையத் தகவல்கள் கூறின.

வவுனியாவில் பண்டிக் கெய்த கிராம அலுவலகர் பிரிவு, புளியங்குளம் வடக்கு கிராம அலுவலகர் பிரிவு, குளம் கிராம அலுவலகர் பிரிவு, நாவற்குளம், புளியங்குளம் தெற்கு கிராம அலுவலகர் பிரிவில் பழையவாடிக் கிராமம் மற்றும் ஆலங்குளம் கிராமம், வவுனியா தெற்கு கிராம அலுவலகர் பிரிவில் பிரப்பைமடுக் கிராமம் ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

பெரியமடுக்குளம், பண்டிக்கெய்த குளம், நாவற்குளம் ஆகிய குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. புதுக்குளம், கிழவிக்குளம், வவுனியாக்குளம் ஆகிய குளங்கள் வான்பாய்கின்றன. ஏற்கெனவே உடைப்பெடுத்த கதிரவேலர் பூவரசங் குளம், மேற்குளம், துலாவிக் குளம் ஆகிய குளங்களிலிருந்து நீர் மேவிப்பாய்கின்றன.

இது இவ்வாறிருக்க குஞ்சுக்குளம், மூன்று முறிப்பு பாதை வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில், அப்பாதையூடான வாகனப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன. அத்துடன், வவுனியாவிலிருந்து-குஞ்சுக்குளம், நவ்விக்குளம் கிராமத்திற்கான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா அனர்த்த முகாமைத்துவ பிரிவுத் தகவல்கள் கூறுகின்றன.

கிளிநொச்சியில் நேற்று வியாழக்கிழமை அதி காலை 5 மணியளவிலிருந்து பெய்த அடை மழை யைத் தொடர்ந்து 43 குடும்பங்களைச் சேர்ந்த 158 பேர் இடம் பெயர்ந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் முரசு மோட்டை கிராம அலுவலகர் பிரிவில் 24 குடும்பங்களைச் சேர்ந்த 94 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் முருகானந்தா அ.த.க. பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் மருதநகர் கிராம அலுவலகர்பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் பன்னங்கண்டி அ.த.க. பாடசாலையிலும் முஹமட் முன்பள்ளியிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பச்சிலைப் பள்ளி பிர தேச செயலாளர் பிரிவில் கச்சார் கிராம அலுவலகர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் தினேஷ் முன்பள்ளியில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இவர்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந் நிலையத் தகவல்கள் கூறுகின்றன. (எ-11)


## அந்தியேட்டி அழைப்பும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

தோற்றம் :
23.02.1956

மறைவு
17.01.201



ஜனவரி மாதம் 17 ஆம் திகதி (17.01.2013) இறைபதமெய்திய எங்கள் குலவிளக்கு **அமரர் வீரவாகு பொன்னுத்துரை** அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி (16.02.2013) சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் தெணியம்மன் ஆலய (எரிஞ்ச அம்மன் ஆலயம்) அந்தியேட்டி மடத்தில் நடைபெறவுள்ளன.
மறுநாளான 17 ஆம் திகதி (17.02.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் வீரவாகு
பொன்னுத்துரை
(பருத்தித்துறை)

**தகவல்: குடும்பத்தினர்**
நாவலடி, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

1500க்கும் மேற்பட்ட தொழில்வாய்ப்புக்கள் & University of Wollongong Australiaவில் **பட்டக்கல்வியுடன்**
**Business & Marketing Communications** (வணிகத் தொடர்பாடல் கற்கைகள்)
&
Dan தமிழ் ஒளி & FM 91.4 இல்
நேரடிப் பயிற்சி, தொழில்வாய்ப்புடன்
**Mass Communications & Media Studies** (ஊடகக் கற்கைகள்)
English for Communication with Information Technology
சுயவிபரக்கோவை, தொலைபேசி இலக்கத்துடன், தொடரவிரும்பும் கற்கைநெறியை கடித உறையில் குறிப்பிட்டு, பெப்ரவரி 20ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
SMS பதிவுகளுக்கு, 'Media' அல்லது 'Business' என்று Type செய்து **077 36 16 798**க்கு அனுப்பவும்
சிகரம் SIKARAM 221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி: 0773 616 798
மி.அ. edusikaram@gmail.com இணையம் www.sikaram.lk

## Spoken English
Spoken English with Grammar and IELTS கற்கை நெறிகள் நடைபெறுகின்றன. G.C.E. (O/L) மாணவர்களிற்கு விசேட கவனிப்புடன் Syllabus Past Papers உடன் பூரணப்படுத்தப்படும். இலவச கருத்தரங்கிற்கு தொடர்புகொள்ளவும்.
N.Sivananthan
**GENIUS INSTITUTE**
184 A, Navalar Road, Jaffna. Tel: 0713106279, 021 320 6656
(1738)

## இலவச அழகுக் கலைப் பயிற்சி
சுவீடன் நாட்டு ஒறிபிளேம் நிறுவனத்தால் நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கும் அழகுக்கலை பயிற்சிகள் பல பேரின் வேண்டுகோளுக்கிணங்க புதிய வகுப்புகள் மீண்டும் ஆரம்பிக்கின்றன. Facial, Gold Facial, Pedicure, Manicure, Eye brow Threading, Hair Style, Make up பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்துடன் இடம்பெறும்.
பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும். மற்றும் வீட்டில் இருந்தவாறே ரூபா 12,000 மேல் உழைப்பதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்படும்.
அறிமுக வகுப்பில் கலந்துகொண்டு உங்களது பதிவுகளை மேற்கொள்ளவும். **அறிமுக வகுப்பில்கலந்துகொள்ளும் அனைவருக்கும் ஒறிபிளேம் Gift Voucher பரிசாகக் கிடைக்கும்.**
**திகதி: 18.02.2013, நேரம்: 10 மணி**
**இடம்: யாழ். ஒறிபிளேம் கிளை நிறுவனம்**
187/30, யூனியன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
(சத்திரச் சந்தி அருகாமை கொட்டடி வீதி)
◆நிபந்தனைக் குட்பட்டது
**தொடர்புகளுக்கு: 0772288243**
(1733)

**SPEED LANKA EXPRESS**
யாழ்.மண்ணில்....
ஓர் மங்களகரமான ஆரம்பம்
✔ உலகளாவிய தபால் பொதி விநியோக சேவை
✔ உள்நாட்டு துரித கதி தபால் பொதிகள் சேவை
✔ அன்பளிப்புப் பொருள்கள் (Gift Delivery) விநியோக சேவை (உள்நாடு/வெளிநாடு)
✔ யாழ்-கொழும்பு சொகுசு பஸ்சேவை
✔ கடல்மார்க்க பொதிகள் சேவை
Valampuri Graphics (F4426)



தொடர்புகளுக்கு:
**135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
தொ.பே: 021 320 1204, 0776217926

**IELTS**



➤IELTS புதிய பிரிவுகள் ஆரம்பம்.
➤3 MONTH COURSE / 1 MONTH EXPRESS COURSE.
➤72 STUDY HOURS WITH 2 MOCK EXAMS.
➤STUDENT VISA எடுப்பவர்களுக்கு அவசியமானது.
➤மாணவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் கவனம் செலுத்தப்படும்.
➤வார நாட்கள், வார இறுதி நாட்கள் என தனித்தனியாக கற்பிக்கப்படும்.
➤தனிப்பட்ட ரீதியில் கவனம் செலுத்தப்படும்.
➤அடிப்படை ஆங்கிலம் தெரியாதவர்களுக்கும் அடிப்படையிலிருந்து சொல்லித்தரப்படும்.
IELTS வகுப்பு நடைபெறும் இடங்கள்: யாழ்ப்பாணம், நெல்லியடி, வல்வெட்டி, சாவகச்சேரி, கிளிநொச்சி.
**STUDENT VISA INTERVIEW PREPARATION**
➤ UK student visa விற்கான Interview தயார்ப்படுத்தல்கள் எம்மால் செய்து தரப்படும். இது STUDENT VISA இற்கான வெற்றி வாய்ப்பை அதிகரிக்கும்.

**STUDY IN UK**
குறைந்த கல்விக் கட்டணம்.
குறித்த கற்கைநெறிகளுக்கு 20 Hours work permi
பொருத்தமான, பிரத்தியோகமான கல்வி ஆலோசனை
நம்பிக்கை மற்றும் உத்தரவாதமான கல்விச்சேவை
வெளிநாட்டு அனுமதிகளில் 7 வருட அனுபவம் உள்ளவர்கள்.
UK இல் கல்வி கற்பது தொடர்பான அனைத்து விளக்கங்களையும் நேரில் தெரிந்து கொள்ளுங்கள்
நேரடியாக எம்மை தொடர்பு கொள்வதன் மூலம் தேவையற்ற ஏமாற்றங்களையும் விரயங்களையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
எம்மூடாக அனுமதி பெறும் மாணவர்களுக்கு IELTS வகுப்புக்கள் இலவசமாக சொல்லித்தரப்படு
**V4 EDUCATIONAL CONSULTANCY (PVT) LT**
அலுவலகங்கள்:- யாழ்ப்பாணம், நெல்லியடி, வல்வெட்டி.
0774836084, 0771516537


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட